# காகங்களும் மைனாக்களும்



புயல்

தமிழ்ச் செய்தித் தகவல் மையத்தின் வெளியீடு

செயலாளர்
இலங்கை இலக்கியப் பேரவை

# காகங்களும் மைனாக்களும்

(சிறுகதைத்தொகுதி)

## ஆசிரியர் : புயல்

வெளியீடு:
தமிழ்ச் செய்தித் தகவல் மையம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | காகங்களும் மைனாக்களும் |
| வகை | : | சிறுகதை |
| ஆசிரியர் | : | புயல் |
| பதிப்புரிமை | : | புயல் |
| முதற்பதிப்பு | : | ஆடி, 2006 |
| கணினி வடிவமைப்பு | : | எஸ்.ஜெ.அன்ரனி மயூரன் |
| அச்சுப் பதிப்பு | : | யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பதிப்பகம் |
| வெளியீடு | : | தமிழ்ச் செய்தித் தகவல் மையம் 021 222 7936 |
| அளவு | : | A5 |
| பக்கங்கள் | : | xii, 50 |
| விலை | : | ரூ 150 |

| | | |
|---|---|---|
| Title | : | Kakamkazhm mainakkazhm |
| Compilation | : | Short Storoes |
| Author | : | Puyal |
| Copy Right | : | Puyal |
| First Edition | : | June, 2006 |
| Computer Design | : | S.J.Antony Mayuran. |
| Printed by | : | Jaffna Co-op Press. |
| Publishers | : | Tamil News Information Center 021 222 7936 |
| Size | : | A5 |
| Page | : | xii, 50 |
| Price | : | 150/= |

சமர்ப்பணம்

எனது வளர்ச்சிக்குத் துணைநின்ற
ஆசிரியர்களுக்கும்
நண்பர்களுக்கும்



# வாழ்த்துரை

புயல் என்ற புனை பெயரை உடைய பெ.ஸ்ரீகந்தநேசனின் "காகங்களும் மைனாக்களும்" என்ற சிறுகதைத் தொகுதிக்கு வாழ்த்துரை எழுதுவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன். எமது தமிழ் துறையில் பயிலும் மாணவனாக இருக்கும் பொழுதிலேயே இரண்டு சிறுகதைத் தொகுதிகளை எழுதியுள்ளார். சென்ற ஆண்டு "செழிப்பைத்தேடும் பறவைகள்" என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இந்த ஆண்டு காகங்களும் மைனாக்களும் என்ற பெயரில் இத்தொகுதி வெளிவருகிறது. இவரின் முயற்சி பாராட்டப்படவேண்டியது.

சிறுகதை என்றால் என்ன? அதன் வடிவம், அதன் உள்ளடக்கம் எவ்வாறு இருக்கும் என்பவற்றை எல்லாம் வரன் முறையாக தமிழ் சிறப்புக் கலையில் பயின்றவர். அவற்றை எல்லாம் உள்வாங்கி சிறுகதை எழுத்தாளனாக இவர் வெளிவருகின்றார். இதனால் தமிழ்த்துறை பெருமையடைகின்றது.

2003ஆம் ஆண்டு பேராதனை தமிழ் சங்கத்தின் சிறுகதைப் போட்டியில் "இன்று வருவாரா நாளை வருவாரா" என்ற இவரது சிறுகதை சிறப்புப் பரிசினை பெற்றது. மேலும் நமது ஈழநாடு நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றார். இந்த அனுபவங்கள் இவர் மேலும் எழுதுவதற்கும் தன்னை எழுத்தாளனாக நிலைநாட்டுவதற்கும் காரணமாக அமைந்தன எனலாம். தட்டிக் கொடுக்கின்ற பொழுதுதான் ஒரு எழுத்தாளன் மேல் நிலைக்கு வரமுடியும்.

காகங்களும் மைனாக்களும் என்ற சிறுகதையினை வாசிக்கின்ற பொழுது உருகாத மனமும் உருகும். மெய்சிலிர்த்து கண்ணீர் ததும்ப வைக்கின்றது. ஈழத்து வாழ் மக்களின் அவலங்கள் காட்டப்படுகன்றது. எழுத்துக்களால் வாசகர்களுக்கு தாக்கம் ஏற்பட வேண்டும் அப்பொழுது அந்த படைப்பு உயிர் பெற்ற படைப்பாக நிற்கும். இது ஆசிரியரின் படைப்பாற்றலை வெளிப்படுத்துவதாகும்.

புயல் ஆசிரியர் யதார்த்தத்தை இக்கதைகள் மூலம் எடுத்துப் பேசுகின்றார் புயல் ஆசிரியர் வளர்வதற்கு காலம் இருக்கின்றது, இளம் கன்றாக இருக்கும் எழுத்தாளன் விருட்சமாக வளர எனது நல்லாசிகள்.

**கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை.**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# வாழ்த்துரை

தமிழ்ச் சிறுகதையின் வரலாறு என்பது பெருக்கெடுத்தோடும் பெருநதி. அந்த நதியில் கலக்கின்ற சிற்றாறுகளில் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் அடங்கும். இந்த சிற்றாற்றில் இணைந்து அதற்கு வளம் கொடுக்கின்ற பற்பல ஓடைகளில் ஒன்றுதான் புயலின் சிறுகதைகள்.

மிகவும் குறுகிய காலத்தில் தனது இரண்டாவது சிறுகதைத் தொகுதியினை "காகங்களும் மைனாக்களும்" என்ற தலைப்பில் வெளியிடுகின்ற புயலின் ஆர்வமும் விடாமுயற்சியும் பாராட்டப்படவேண்டியவை. முதலாவது தொகுதிக்கு வாசகர்கள் அளித்த வரவேற்பும் அவரை இத்தனை வேகமாகச் செயற்பட உந்துதலளித்திருக்கின்றது. என்பது மறுக்க முடியாத உண்மை.

புயல் வேகமானது. கொடூரமானதுங் கூட. ஸ்ரீ கந்தநேசன் என்ற புயல் சிந்தனைகளில் இருக்கின்ற வேகம். சமுதாயத்திற்கு அவசரமாக எதையோ சொல்லிவிடத்துடிக்கின்ற வேகம். சொல்ல வேண்டும் சொல்ல முடியாததையும் சொல்லக கூடாததையும் சொல்லத் துடிக்கின்ற வேகம் புயலின் வேகம் அவன் வாழ்ந்த காலத்தின் விளைவுஅது.

**உனது சிந்தனைகள் புயலாக வீசவேண்டும். சிலருக்கு கொடூரமானதாக இருந்தாலும் அது வீசட்டும். மௌனித்து மௌனித்து மனதுள் புதைப்பதனால் மானுடம் தோற்றுவிடும். நீ மௌனத்தைக் கலைத்துப் புயலாக வீசு! எதிர்காலம் உனக்காகக் காத்திருக்கின்றது.**

உனது தன்னம்பிக்கையினையும் விடாமுயற்சியினையும் மனதாரப் பாராட்டுகின்றேன். உனது வளர்ச்சி ஈழத்துத் தழிழ் இலக்கியத்திற்கு உரமூட்டும் என்ற நம்கிக்கையோடு உன்னை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**கலாநிதி ம.இரகுநாதன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்.**
**தமிழ்த்துறை.**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**யாழ்ப்பாணம்.**

# அணிந்துரை

ஈழத்தின் புனைகதை இலக்கியத்திற்கு வனப்பும் கனதியும் சேர்ந்தவை வன்னி இலக்கியங்களாம் என்பது மறுப்பதற்கில்லை.அவ்விலக்கியத்திற்கு அணி சேர்க்க மாங்குளம் புயல் பெ.ஸ்ரீகந்தநேசன் எழுத்துத் துறைக்கு வந்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று நிறைவுப் பரீட்சை எழுதிவிட்டு முடிவிற்காகக் காத்திருக்கும் ஆசிரியர் நவீன இலக்கியத்தின் செயல்நெறியை நன்கு புரிந்தவராக இருப்பார். ஏற்கனவே "செழிப்பைத் தேடும் பறவைகள்" என்றொரு சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். நமது ஈழநாடு நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசினைப் பெற்றதன் மூலம் தன் ஆற்றலை நிறுவிக்கொண்டவர்.

புயல் பெ.ஸ்ரீகந்தநேசனின் இச்சிறுகதைகளை வாசிக்கும்போது உணர்வு பூர்வமான சிந்தனைகள் மிகத் தூக்கலாக விளங்குவதைக் காணலாம். இளம் படைப்பாளிகளின் எழுத்துக்களில் அவர்தம் நெஞ்சங்களைக் காயப்படுத்திய சமூக அடக்கு முறைகளுக்கு எதிராகப் பேனாவை உணர்வு பூர்வமாக ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகின்ற போக்கினைக் காணலாம். அது தவிர்க்க முடியாதது.

ஆசிரியரின் "காகங்களும் மைனாக்களும்" என்ற சிறுகதைத் தொகுதியில் பத்துச் சிறுகதைகள் இடம் பிடித்துள்ளன. தலைப்புக்கதையான "காகங்களும் மைனாக்களும்" ஒரு வித்தியாசமான நல்ல கதை. சமகால அவலங்களைக் குறியீடு ஒன்றின் மூலம் ஆசிரியர் சித்திரித்துள்ளார். மைனாக்குஞ்சினைப் பறிகொடுத்துவிட்டு மைனாக்கள் திரும்புகின்றன. காகங்கள் என்ற குறியீடு சுட்டும் மனிதர்களைத் தேடிப் போகின்றான். இச்சிறுகதை தொடங்கும் விதமும் நிறைவு செய்யும் விதமும் சிறப்பாகவுள்ளன. காணாமற் போனவராகக் கருதப்பட்டு தவறான சடலத்திற்கு இறுதிக்கிரியைகள் பலவிடங்களின் நடந்திருக்கின்றது. செத்தவன் உயிரோடு வந்தபோது எம் சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கை எத்தகைய விபரீதமான முடிவை எடுக்கத் தூண்டுகிறது என்பதை "கவிதா பைத்தியக் காரியாகின்றாள்" என்ற சிறுகதை விபரிக்கின்றது.

"வாழத்துடிக்கும் இளங்கிளி" சற்று சிறுகதைப் பரப்பிற்கு மிகைப்பட்டு பல சம்பவங்களின் இணைப்பினைக் கதைக் கருவாகக் கொண்டுள்ளதெனினும் அச்சிறுகதையில் சமூகக்

கரிசனை சிறப்பாக விழுந்துள்ளது. "பயணங்கள் முடிவதில்லை" இச்சமூகத்தின் கு ரூரமுகம் ஒன்றினைச் சித்திரிக்கின்றது. "இயற்கை தந்தபாடம்" என்ற புயலின் சிறுகதையில் ஆசிரியரின் சிறப்பான அவதானிப்பினை இனங்காணமுடிகின்றது. அத்துடன் சிறுகதை என்பது கதை சொல்வது மட்டுமன்று, சமூகத்தின் நெஞ்சினை விழிக்க வைப்பதமாகும் என்பதற்கு தக்க உதாரணமாகின்றது. இயற்கை முன் அனைவரும் சமன் என்பது செய்தியாக ஒலிக்கிறது. "பாதிச்சமணர்" நவநாகரிக எள்ளல் சிறுகதையாகும். புயலின் ஏனைய சிறுகதைகளும் சமகாலச் சமூகத்தின் இழிநிலைகளைச் சித்திரிக்கின்றது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் குறிப்பிடுவதுபோல, "தன்னுடைய சமூகத்தின் பல்வகைப்பட்ட துன்பங்களையும் இன்னல்களையும் தன்னுடைய கதைகளூடாக ஆசிரியர் காட்டுகிறார். போரினுடைய கொடுமை. ஆக்கிரமிப்பாளர்களுடைய அடாவடித்தனங்கள், இவற்றினால் நைந்துபோன மக்களின் நொந்துபோன மனங்களின் ஏக்கமும் எதிர்ப்புகளும் முன்வைக்கப்படுகின்றன" என்பதை இவரது சிறுகதைகளின் அவதானிக்கலாம். பேராசியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி ம.இரகுநாதன் ஆகியோரின் மாணாக்கனான புயல் பெ.ஸ்ரீகந்தநேசனிடம் ஈழத்துச் சிறுகதை உலகு இன்னமும் உன்னதமான படைப்புகளை எதிர்பாக்கின்றது. "இலக்கியம் என்பது கலையழகோடும் தேடலோடும் அமையவேண்டும்." என்ற பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கருத்துடன் ஈழத்திலக்கியத்தின் எதிர்கால நம்பிக்கையான புயலை வாழ்த்துகின்றேன்.

**செங்கை ஆழியான் க.குணராசா**
79/10A, **பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**03.06.2006.**

# வாசகர் குறிப்புக்கள்

# வெளியீட்டுரை

நவீன இலக்கியத்துறை தமிழுக்குள் நுழைந்து ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் கடந்து விட்டன. நவீன இலக்கியச் செயல்நெறியில் நாவல், சிறுகதை முதலான புனைகதை வடிவங்கள் பன்முகக் கூறுகளுடன், காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் வெளிவந்தவண்ணம் உள்ளன. இலக்கியம் மனித வாழ்வியல் நடைமுறையின் அழகியல் சார்ந்த பார்வைகளின் திரட்சி என்கின்ற வகையில் சிறுகதை, வாழ்வியல் தடத்தைப் பதிவு செய்வதாகவே அமைகின்றது,

சிறுகதை அழகியலும், தனிமனித உணர்வின் நகர்வும், சமுதாயப் பார்வையும் கொண்டதாக அமையும். இறுக்கமான கதைப் பின்னலுடன், பொருத்தமான பாத்திர இயக்கத்துடன் தேர்ந்த சொல்லாட்சிகளுடன் சடுதியாக உணர்வைத் தோற்றுவிக்கக் கூடிய முடிவுடன் சிறுகதை திகழும்.

மேற்கூறிய பண்புநிலைகளுடன் சிறுகதைப் புயலின் தொகுப்பினுள் நுழையும் போது புயல், இப்பண்பு நிலைகளை நன்கு உள்வாங்கிக் கொண்ட ஒரு ஆக்க இலக்கிய காரன் என்பதை இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் புலப்படுத்தி நிற்கின்றன.

தமிழும், தமிழிலக்கியப் பரப்பும், உலக ஓட்டத்துடன் ஒத்தோட வேண்டிய கடப்பாடு முகம் நீட்டியுள்ள தற்போதய சூழலில் தமிழில் வெளிவருகின்ற படைப்புக்கள், அக்கடப்பாட்டின் செயல்பாட்டிற்கு இயக்கம் கொடுப்பனவாக அமையவேண்டும் என்பதில் புயலின் படைப்புக்கழும் ஆர்வம் கொண்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இன்னுமொன்று, இளைய தலைமுறையின் இன்றைய போக்கு அடிக்கடி பலராலும் கவலையுடன் சுட்டிக்காட்டப் படுகின்ற விடயம். நாகரீகத்தின் துரிதத்தினுள் அகப்பட்டுத் துளிர்விடுகின்ற அபாயமான கட்டத்தில் இளைய தலைமுறையின் பெரும் பகுதி தானாகவே போய் நிற்கின்றது.

இந்நிலையில் "புயல்" போன்ற இளைஞர்கள் படைப்புத்துறையில் நுழைந்து தம்மை நிலைப்படுத்திச் சமுதாய அவலங்களைச் சத்திய ஆவேசத்துடன் பதிவு செய்ய முனைந்துள்ளமை பராட்டத்தக்க விடயம்.

புயல் தன்னுடைய பயணத்தை வெற்றிகரமாகவே ஆரம்பித்துள்ளார். இவ்வெற்றியும் அவருடைய ஆளுமையும் பன்முகப்பட்டு வளரவேண்டும் என வாழ்த்துவதில் மனநிறைவு அடைகின்றேன்.

எமது நிறுவனத்தின் போஷகர்களில் ஒருவரான திரு எஸ்.ரி கணநாதன் அவர்கள் இச் சிறுகதைத் தொகுப்பு நூல் வடிவம் பெற்று வெளிவருவதற்கு பேருதவி புரிந்துள்ளார். எம்முடைய நிறுவனம் புயல் போன்ற இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் என்றும் பின்னிற்காது. ஒரு வகையில் இது எம்முடைய நிறுவனத்தின் தூரப் பார்வையையும் இனங்காட்டுகின்றது என்பதையும் இங்கு குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

இ.ஜ. பாலு.

இணைப்பாளர்
தமிழ்ச் செய்தித் தகவல் மையம்
யாழ்ப்பாணம்

12-06-06

# முன்னுரை

சமுதாயத்தில் நான் கண்ட அனுபவப்பட்ட விடயங்களின் வெளிப்பாடாக "காகங்களும் மைனாக்களும்" என்ற பெயருடன் இரண்டாவது சிறுகதைத் தொகுதி வெளிவருகின்றது. சிறிய வயதில் எனது தந்தையார் படிப்பதற்கு நிறையவே அம்புலிமாமா புத்தகங்களை வாங்கித்தருவார். அவற்றைப் படித்ததினால் எனது கற்பனைத்திறன் ஓரளவுக்கு வளர்ச்சியடைந்தது. ஆனால், நான் கற்பனைத்திறன் வாய்ந்த சிறுகதைகளை எழுதுவதைவிட யதார்த்தத் தன்மை வாய்ந்த சிறுகதைகளையே எழுத விரும்புகின்றேன்.

அவ்வாறான யதார்த்த தன்மைகளின் வெளிப்பாடே இந்த "காகங்களும் மைனாக்களும்" என்ற சிறுகதைத்தொகுதியாகும். இந்திய எழுத்தாளர்களான புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அகிலன் போன்று ஒருவரும் இலங்கையில் தோன்றாமைக்குக் காரணம் அங்குள்ள எழுத்தாளர்கள் நாணயக்கயிறு போடாத காளை போன்றவர்கள் இங்குள்ள எழுத்தாளர்கள் நாணயக்கயிறு போட்ட காளை போன்றவர்கள்.

இந்த தொகுதி வெளிவருவதற்கு உதவிபுரிந்த அனைவருக்கும் இந்த இடத்தில் எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். மேலும் எனது முதலாவது சிறுகதைத் தொகுதியான "செழிப்பைத் தேடும் பறவைகளுக்கு" வாசகர்களிடம் இருந்து கிடைத்த ஆதரவுக்கு எனது நன்றிகள். அதேபோல இந்தத் தொகுதிக்கும் உங்களின் ஆதரவுகிடைக்கும் என்று நம்பகின்றேன். இங்குள்ள சிறுகதைகளை பிரசுரித்த பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

இங்குள்ள சிறுகதைகள் எந்தளவுக்கு யதார்த்த தன்மை வாய்ந்தவை என்பதை வாசகர்களே தீர்மானிக்க வேண்டும். எனது எழுத்துப்பணியின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் வாகசர்களின் கைகளிலேயே தங்கியுள்ளன. எனவே வாகசர்களே நீங்கள் இந்தநூல் பற்றிய குறைநிறைகளை எனக்கு எழுதி அனுப்பிவையுங்கள். அப்போதுதான் எனது எழுத்தின் செம்மைத்தன்மையை மேலும் கூட்டிக்கொள்ள முடியும். எனது அடுத்தடுத்த தொகுதிகள் வெளி வருவது வாசகர்களே உங்களின் கைகளில்தான் தங்கியுள்ளன.

நன்றி.

**ஆசிரியர்**
**புயல்.**

# பொருளடக்கம்


- பயணங்கள் முடிவதில்லை
- பாதிச்சமணர்
- சமுதாயம் ஏற்குமா...?
- கவிதா பைத்தியக்காரியாகின்றாள்.
- நீ எனது காதலி மட்டும்தான்...
- வாழத்துடிக்கும் இளங்கிளி
- இயற்கை தந்த பாடம்
- காகங்களும் மைனாக்களும்
- பகிடியால் வந்த வினை
- துரோகம்

"…..அவளின் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் ஆறாகப் பெருகின. ஏற்கனவே சில் லென்று வீசியகுளிர்காற்றைத் தாங்க முடியாமல் முனுமுனுத்து அந்த பிஞ்சுக் குழந்தை இவளின் கண்ணீர்த் துளிகள் உடலில் பட்டதும் மேலும் மேலும் முனுமுனுக்கத் தொடங்கியது……."

# பயணங்கள் முடிவதில்லை



நான் அந்த வீதியால் பஸ்ஸில் சென்றேன் சாவகக்சேரி பஸ்நிலையத்தில் பஸ் நின்றதும் காற்சட்டையில் பின்பக்கத்தில் இரண்டு ஓட்டைகளுடனும் கிழிந்த பொத்தானில்லாத வெளிறிப்போன சேட்டுடனும் ஊளை நாற்றத்துடனும் எனக்கு அருகில் வந்து ஏதோ என்னை முன்னர் அறிந்தவனைப் போல "தானங் கொடுங்க" என்று எனது முகத்துக்கு முன்னே கையை நீட்டினானான்.

அவனது இடுப்பில் இருந்த ஐந்து வயது மதிக்கக் கூடிய சிறுமி இறங்கி வேறொரு பக்கத்தால் தனது கையை நீட்டி காசை வாங்கியது. டிக்கட் எடுத்துவிட்டு பத்து ரூபாய் மிச்ச காசு இருந்தது அதைக் கொடுத்தேன். அவன் கையில் வாங்கியதும் எனது முகத்தை சிரித்தவாறே பார்த்தான் "தம்பி அது யாரு?" என்று அவனைக் கேட்டதும் "அது தங்கச்சி" என்றவாறு தலையைச் சொறிந்தான். "உண்ட அம்மா எங்க?" "குண்டு வீச்சில செத்துப்போச்சி….. என்ர காலும் போச்சி…" எனத் தனது மரக்காலைக் காட்டிக் கூறினான். "என்ன பேர்?" " விமலா…" எனக்கூறியதும் எனக்கோ பத்துவருடங்களுக்கு முன் இவளைக் கண்ட ஞாபகம் வந்தது. அட கடவுளே விமலாவுக்கு இன்னுமொரு பிள்ளையா? "தம்பி கெதியா இறங்கிப் போடா" பஸ் வெளிக்கிடப் போகுது என்று கொண்டக்டர் கத்தினான். பஸ் புறப்பட்டது. அந்தநாள் ஞாபகங்கள் என்னைச் சுற்றிவரத் தொடங்கின.

யாழ்ப்பாணத்து சாலையில் கண்ணாடிக்குப் பதிலாக பொலித்தின் தாள்கள் அடைக்கப்பட்ட ஜன்னல்களும் கிழிந்த கடதாசி மட்டைகளைக் கொண்டு அடைக்கப்பட்ட கதவுகளையும் ஏதோ வேண்டா வெறுப்பாக அமைக்கப்பட்ட இருக்கையும் இரண்டு கண்களில் ஒரு கண்ணை இழந்தவனைப் போல ஒற்றை லைட்டுடனும் உர்...உர்...உர்... என்ற சத்தத்துடனும் என்னைவிட்டால் இப்போதே புறப்பட்டுவிடுவேன் என முன்னும் பின்னுமாக பாய்வதினைப் போல இராசையாவின் மினிபஸ் நின்றது.

கொண்டக்டர் "ஓடிவாங்கோ ஓடிவாங்கோ முகமாலைக்கு போறவங்க இருக்க சீட்டு தரலாம்" என்று பசியால் கத்தும் பூனையைப்போல் கத்தினான். அன்று மாதமோ மார்கழி என்றதனால் அதிகாலை சூரியனைக் காணவில்லை. எங்கும் புகைபரவுவதைப் போல மழைத்துளிகள் தூறிய வண்ணம் இருந்தன. இதைக் கூடப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து கத்தினான்.

மினிபஸ்சில் ஜனக்கூட்டமோ நிறைந்து விட்டது. உர்ர் உர்ர்..." என்ற சத்தத்துடன் கரிய புகையை பின்னாலே தள்ளிய வண்ணம் புறப்பட்டது. "அண்ணோய் அண்ணோய் நிப்பாட்டுங்கோ" என கத்தியவாறு கரிய புகையை ஒரு கையால் விளக்கியவாறு ஓடிவருகிறது ஒரு குழந்தை. கடார் புடார் என்ற சத்தத்துடன் பிறேக்கில் காலைவைத்ததும் மினிபஸ் நின்றது.

அந்தப்பிள்ளைக்கு கிட்டத்தட்ட பதிநான்கு வயது தான் இருக்கும் அவளோ ஒரு குழந்தை ஆனால் அவளின் கையில் இன்னுமொரு குழந்தையை வைத்திருந்தாள். தங்க ஆபரணங்கள் அணிய வேண்டிய இடங்களிலெல்லாம் துணிப்பட்டிகளும் இறப்பர் தோடுகளும் பித்தளைக் காப்புக்களையும் அணிந்திருந்தாள் தோள் பட்டையில் சின்ன துணிப்பையொன்று தூங்கிய வண்ணம் இருந்தது. பின்னே முதுகுப்பக்கத்தில் ஒரு துணிமூட்டை அந்த மூட்டையே அவளைவிட பெரிதாக இருந்தது. குழந்தயைப் போத்தி வைப்பதற்கு துணியில்லைப் போல அதனால் தான் குழந்தையைப் பிறந்த கோலத்துடன் கொண்டு வருகிறாள். அது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? எனக்குத் தெரியவில்லை ஆனால் ஒன்று மாத்திரம் தெரிந்தது உகாண்டாவில் குவாஸ்சியக்கோர், மராஸ்மஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை நான் தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறேன் அதைப போலவே இந்த இரண்டு குழந்தைகளும் எனது கண்ணுக்குக் காட்சியளித்தனர்.

இவை அனைத்தையும் அந்தக் குழந்தை கையில் குழந்தையுடன் மழைத்துளிகள் இடையே ஓடிவரும்போதே அவதானித்துவிட்டேன்.

பஸ்ஸில் ஏறிய அவள் அந்தரப்படுகிறாள் என்னால் பொறுக்கமுடியவில்லை "தங்கச்சி இந்த சீட்டில இருங்க" என்று கூறி நான் எழுந்து நின்றேன். அங்கு பயணம் செய்த பயணிகளும் கொண்டக்டரும் "அரை டிக்கட்டுக்குச் சீட்டு இல்லை" என்று கத்தினார்கள் அத்துடன் என்னை கேவலமாக பார்த்தார்கள். நான் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

யாழ்ப்பாணடவுனைத் தாண்டி செம்மணி வெளியில் பஸ் சென்று கொண்டிருந்தது. சில்லென்று வீசும் குளிர்காற்று இந்த குளிர்காற்றை தாங்க முடியாமல் கையில் இருந்த குழந்தை முணுமுணுத்தது. நான் எப்போதும் பயணம் போகும் போது இயற்கைக் காட்சிகளை இரசித்தவண்ணமே செல்வேன். ஆனால் அன்றைக்கு வழமைக்கு மாறாக இந்த இரண்டுகுழந்தைகளின் வாழ்க்கையை யோசித்த வண்ணமே சென்றேன்.

பக்கத்து சீட்டில் இருந்த வயதான ஐயா "தம்பி பஸ்ஸ கடைக்கிட்ட நிப்பாட்டச் சொல்லும்" என்று கத்தினார். அவர் இறங்கிச் சென்றதும் அந்த இருக்கை வெறுமையாக இருந்தது. குழந்தையின் அலறல் சத்தத்தையும் அவளையும் பார்த்த எவரும் அவளுக்கு அருகில் அமரவில்லை. நான் ஏதோ இதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவளைப்பற்றிய விடயங்களை அறிவதற்காக அவளருகே அமர்ந்து கொண்டேன்.

மெதுவாக "தங்கச்சி எங்க போறீங்க" எனக் கேட்டேன். அவளோ சாவகச்சேரி சந்தைக்கு என்றாள். இதைக் கேட்டதும் எனது சந்தேகம் இன்னும் அதிகரித்துவிட்டது. "உம்முடைய பெயர் என்ன?.." கேட்டதும் "விமலா" என கூறியதும் பிள்ளையின் மடியில் இருந்தக் குழந்தைக் கத்தியது. பாதி பிஸ்கேட் துண்டை கொடுத்ததும் சத்தம் கொஞ்சம் அடங்கியது. மூட்டையில் இருந்து எடுத்த பிஸ்கேட்டே ஏதோ பிண்ணாக்குப் போல இருந்தது. அப்போது தான் எனக்குத் தெரிந்தது அது ஆண்குழந்தை என்று.

எனது மனம் என்னை சும்மாயிருக்கவிடவில்லை. "தங்கச்சி என்னத்துக்குச் சந்தைக்குப் போறீங்க?" "மரக்கறி விக்க" என்றாள்.

நான் மீண்டும் "உமக்கு அப்பா அம்மா சொந்தபந்தம் யாருமில்லையா?" என்றதும் அவளின் கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் ஆறாகப் பெருகியன. ஏற்கனவே சில்லென்று விசீயக் குளிர்காற்றைத் தாங்க முடியாமல் முணுமுணுத்தது. அந்த பிஞ்சுக்குழந்தை இவளின் கண்ணிர்த் துளிகள் உடலில் பட்டதும் மேலும் மேலும் முணுமுணுக்கத் தொடங்கியது.

"அண்ணா என்ர சொந்தக்காரர் எல்லாம் எனக்கு இரண்டு வயசா இருக்கும் போது அப்பா என்னை பக்கத்து ஊர் நேசறியில் படிக்க விட்டு கூட்டிக்கொண்டு வருவார் அன்று என்னை நேசறியில் இறக்கிவிட்டு வரேக்க எங்கட கிராமத்திலே பொம்பர் தொடர்ந்து பல குண்டுகளைப் போட்டு எனது ஊரையே அழித்து விட்டது. எல்லாமே செத்துப் போனார்கள். நான் அன்று தொடக்கம் பக்கத்தூர் மொதலாளி வூட்டிலதான் வளர்ந்தனான்" இதைக் கேட்டதும் எனது கண்கள் கலங்கியன. இதைப் போல இந்த நாட்டில் எத்தனை சிறுவர்கள் இருப்பார்கள்.

இவளே குழந்தையாக இருக்கும் போது இந்தப் பிஞ்சிக் குழந்தை எப்படி இவளுக்கு வந்தது என்று எனது மனம் சஞ்சலப்பட்டது. அதற்கிடையில் "அண்ணா புள்ளைக்கு சாப்பாடு வாங்க காசு இருந்தா தாங்களேன்..." எனது சட்டைப்பையில் இருந்த நூறு ரூபாவை என்னை அறியாமல் தூக்கிக் கொடுத்தவிட்டேன்.


நான் காசுக் கொடுப்பதைக் கண்ட பக்கத்துசீட்டில் இருந்த ஒரு மனிதன் வைச்சகண்ணெடுக்காமல் என்னையே பார்த்தார். ஏன் இவர் இப்படி பார்க்கின்றார். இவள் ஏதோ கெட்டவளோ? அல்லது தீய செயல்களில் ஈடுபடுபவளோ? என எனது மனம் மேலும் மேலும் சந்தேகம் கொள்ளத் தொடங்கியது.

"சாவகச்சேரி சந்தை வந்துவிட்டது இறங்கிறவர்கள் இறங்குங்கள்" கொண்டக்டர் கத்தினான் விமலாவும் இறங்கிவிட்டாள். அவள் இறங்கிச் சென்றதும் அவளையே எனது மனம் வட்டமிட்டது. ஏன் சமுதாயம் இவளை அநாதையாகவே விட்டுவிட்டது? இவள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வழியில்லையா? சிட்டுக்குருவி போல பறந்து திரிய வேண்டிய இந்தக் குழந்தை இன்னுமொரு குழந்தையுடன் வாழ்க்கையை வெறுத்ததினைப் போல திரிவதேன் என்று எனது எண்ணத்தில் பல சிந்தனைகள் தோன்றின.

எனக்குப் பக்கத்தில் அமர்ந்த ஐயா "என்ன தம்பி யோசிக்கிறீங்க?" என்றார். "இல்ல இப்ப இறங்கிப் போனதே அந்தப் பிள்ளையைப் பற்றித் தான்" "அட அதுவா அவளுட கொட்டிலுக்குப் பக்கத்தில தான் எண்ட வீடும் இவளிட அப்பா அம்மா சொந்தக்காரர் எல்லாம் சண்டையால செத்துப் போனதும் ஒரு முதலாளி தன்ட சொந்த பிள்ளைமாதி வளர்த்து வந்தார். இது கொழுத்துப் போய் சாமத்திய சடங்கு முடிந்து ஒருவருடத்துக்குள்ளையே ஒரு பெடியனைக் காதலிசிச்சி அவனும் காதலிக்கிற மாதிரி நடிச்சி இவளுக்கு ஒரு புள்ளையை கொடுத்துட்டு வெளிநாட்டுக்குப் போய்ட்டான்" என்று வேண்ட வெறுப்பாக கூறினார் அந்த ஐயா. "இல்ல ஐயா அது சிறுமி பாவம் அப்படி திட்டவேண்டாம்" என்றேன்.. "இதுவா சின்னப் பிள்ளை..." என்று தனது வாய்க்குள் முணுமுணுத்தார்.

இதையெல்லாம் கேட்டதும் எனது மனதுக்குள் கேள்விகள் பல பல வடிவங்களில் தோன்றின. இவளை சிறுவர் இல்லங்கள் ஒரு குழந்தைக்குத் தாய் என்ற காரணத்தால் உள்ளே அனுமதிக்கவில்லையோ? ஏன் முதலாளி மன்னித்து வீட்டுக்குக் கூப்பிடக்கூடாது? ஏன் இவள் சிறிய வயதில் காதலித்தாள்? ஏன் இவளுக்குக் கடவுளும் கண் திறக்கவில்லை? ஏன் பொலிஸ் நிலையங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை? ஏன் இந்த சமுதாயம் தவறு செய்த இந்த சிறுமியை மன்னிக்க மறுக்கின்றது? இது அறியாமல் செய்த தவறு அல்லவா. இதை நான் மட்டும் நினைத்தால் போதுமா இந்த சமுதாயமல்லவா உணர வேண்டும் என்று கேள்விகள் தோன்றிய வண்ணமே உள்ளன. அன்றைய தினம் சோகத்துடனே வீட்டுக்குச் சென்றேன்.

நான் இறங்குமிடம் வந்துவிட்டது. பஸ் நின்றது. இடுப்பில் குழந்தையுடன் விமலா சென்ற காட்சியும், இப்போது இவன் செல்லும் காட்சியும் மாறி மாறி எனது மனக் கண்களில் தோன்றிய வண்ணமுள்ளன. பக்கத்து இருக்கையில் நித்திரையாக இருந்த என் மகள் மதுவைத் தட்டியெழுப்பினேன். அவளும் "அப்பா... என்றவாறு விழித்தாள் பஸ்சில் இருந்து இறங்கிய பின்னரும் அந்தக் குழந்தைகளின் எதிர்காலத்தை சிந்தித்தவாறு எனது மகளை இடக்கையில் பிடித்துக்கொண்டே நடந்தேன்.



**"........அப்பா பாதிச்சமணரும் இல்ல முழுச்சமணரும் இல்ல உங்களுக்கு இப்பத்தைய உலகம் தெரியாது. இதுதான் இப்பத்தைய "பெஸன்" இது எல்லாம் உங்களுக்குத் தெரியாது .............."**

# பாதிச்சமணர்

" என்ன அப்பா இந்த உலகம் A9 பாதை திறந்து விட்டதுதான் தெரியும் எமது தமிழ்ச் சமூகம் சீரழிந்து விட்டது..........

இராணுவத்தின் ஆக்கிரமிப்பினால் எவ்வளவோ உயிர்களும் சொத்துக்களும் அழிந்து போச்சு....வெளியில் போவதுனா ஆமி ஐசி, பாஸ் இரவில் சுதந்திரமாக நடமாட முடியாது. வீதிகள் தோறும் நெருப்பில் பாதி எரிந்தும் எரியாத மரத்தைப் போல ஆமிக்காரர் கறுத்த துணியால் முகத்தைக் கட்டிக் கொண்டு நிற்கின்றார்கள்......... இதெல்லாம் எப்போதுதான் மாறுமோ?" யோசித்தவாறு வேலாயுதத்தார். லண்டனில் இருந்து வரும் தனது இரண்டு மகள் மாரையும் அழைத்து வருவதற்காக நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாண பேரூந்து நிலையத்தை நோக்கி தனது மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார்.



நெல்லியடியில் வேலாயுதத்திற்கும் சக்திக்கும் பிறந்தவர்களே சிந்தும், பைரவியும் ஆகிய இரட்டைக்குழந்தைகள். யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட போர் கொடூரத்தினால் 1995ம் ஆண்டு காலப்பகுதியில் சக்தி இறந்துபோனாள். தனது இரண்டு பிள்ளைகளையும் வளர்க்க முடியாத வேலாயுதத்தார் இரண்டு காணியில் ஒரு காணியை விற்று தனது அக்கா இருக்கும் நாட்டுக்கு அனுப்பிவைத்தார்.

இதன் பின்னர் வேலாயுதத்தார் தானே தனியாக தனது வேலைகளைக் கவனித்தார் யாழ்ப்பாணத்தில் பிரபலமான தமிழ் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்.

யாழ்ப்பாண பேரூந்து நிலையத்தை சென்றடைந்ததும் அவர் தனது மோட்டார் சைக்கிளை "பாக்" பண்ணிவிட்டு கையடக்கத் தொலைபேசி மூலம் மகள்மாருக்கு அழைப்பை ஏற்படுத்தினார்.

"அம்மா மகள் எங்க நிற்கிறீங்க....."

"அப்பா இண்டைக்கு வரமுடியாது நாங்க கொழும்பில் இருந்து வவுனியா வந்ததும் புளியங்குளத்துச் சோதனைச் சாவடியைக் கடக்கும் முன் பூட்டிப் போட்டாங்க நாளைக்கு மத்தியானந்தான் வருவோம்.." என்றாள் சிந்து.

வேலாயுதத்தார் பேரூந்து நிலையத்தில் நின்றவாறு சுற்றும்முற்றும் தனது பார்வையைத் திருப்பினார். இவர் ஆசிரியர் தொழிலில் இருந்து ஓய்வு பெற்ற நாள்முதல் அவ்வளவாக வெளி இடங்களுக்குப் போவதில்லை, "வந்தது களைப்பாற சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு போவம்" என்றவாறு பேரூந்து நிலையத்தின் கட்டடக்குந்தில் அமர்ந்தார்.

அங்கு கச்சான் விற்றுக் கொண்டு போன சிறுவனைப்பார்த்து "தம்பி நீ பள்ளிக்கூடம் போவதில்லையா ஏன் இப்படி சிறிய வயசில வியாபாரம் செய்ர....... தம்பி நீ எத்தனை வரை படித்திருக்க"
"அதுவா வீட்டுக் கஷ்டத்தினால் பத்தாம் வகுப்போட நிப்பாட்டிப் போட்டன்"

"அப்ப இவனுக்கு சமண மதம் பற்றி தெரிந்திருக்கும்" என்று நினைத்துக்கொண்டு. "தம்பி இது ஏன் எல்லோரும் பாதிச்சமணராகத் திரிகின்றாங்க? நானும் கன காலமாக டவுணுக்கு வரவில்ல நாட்டில சமாதான ஒப்பந்தம் வந்ததுக்கு இப்பதான் வந்திருக்கிறன்.." என்றவாறு கச்சான் சரையொன்றை வாங்கிக் கொண்டார்.

"ஐயா எனக்கு இதொன்றும் தெரியாது என்ர காசைக் கொடுங்க அடுத்த பஸ் புறப்படப் போகுது நான் போகனும்" என்று கூறி காசை வாங்கிக் கொண்டு ஓடிவிட்டான்.

வேலாயுதத்தாருக்கு சந்தேகம் அதிகரித்துக்கொண்டே போனது "சங்கமருவிய, பல்லவர் காலங்களிலதான் சமணத்தின் செல்வாக்கு அதிகமாக இருந்தது அது என்ன கொடுமையடா தமிழர்களில் முக்கால் பங்கினர் மீண்டும் பாதிச் சமணராக மாறிவிட்டார்கள். தமிழர் கலாசாரத்தில் ஆண்கள் வேஷ்டி, சட்டை, சால்வையும் பெண்கள் உடல் முழுவதையும் மறைத்து சேலையும் அணியும் பழக்கம் கொண்ட சமுதாயம் ஏன் இப்படி மாற்றம் அடைந்தது?" என்று தனக்குள் அந்தச் சந்தேகங்களைப் போட்டு குழப்பிக்கொண்டு வீட்டைச் சென்றடைந்தார்.

அவர் ஆசிரியர் தொழில் செய்த போது உயர்தர மாணவர்களுக்கு தமிழ் வகுப்பு எடுத்தது ஞாபகத்திற்கு வந்தது. "பிள்ளைகளே சைவம், வைணவம் ஆகிய மதங்களை எதிர்த்து போராடிய மதங்களில் பல்லவர்காலத்தில் பௌத்தத்தை விட சமண மதமே அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால், சமண மதத்தின் கடுமையான போக்கினால் சைவ, வைணவ மதங்களினை வெற்றி கொள்ள முடியவில்லை......" ஞாபகம் முடிய.

"இப்படி தீவிரமான போக்கு கொண்ட மதம் எப்படி இப்போது செல்வாக்கு செலுத்திவருகின்றது ஐயோ இதனை எதிர்த்து போராட யாருமில்லையா?". என்று தனக்குள் சிந்தித்தவாறு அரைகுறையாக நித்திரை கொண்டு. வைகறைப் பொழுதில் படுக்கையில் இருந்து எழுந்து கொண்டார்.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு புறப்பட்டார். வீதியில் நேற்றைய தினத்தை விட பாதிச்சமணர் அதிகமாகவே காணப்பட்டனர்.அவர்களை மறித்து கேட்டால் என்ன என்று அவரது மனம் நச்சரித்துக்கொண்டது கேட்டால் விபரீதமாக எதுவும் நடந்து போகும் என நினைத்துக் கொண்டு மௌனமாகச் சென்றார்.

முகமாலையிலிருந்து யாழ்ப்பாண பேரூந்து நிலையத்தை பஸ் வந்தடைந்தது சனங்கள் திரள்திரளாக இறங்கி வந்தனர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தனது மகள்மாரைப் பார்ப்பதற்கான ஆசையோடு நின்றார்.

நீண்ட நாட்கள் சென்றாலும் சிந்தும், ரைவியும் அப்பாவை அடையாளம் கண்டு கொண்டு ஓடிவந்து கட்டியணைத்து "அப்பா....... எப்படி இருக்கிறீங்க..." என்றவாறு அழுதனர்.

சிறிய வயதில் மகள்மாரை வெளிநாட்டுக்கு அனுப்பினாலும் வேலாயுதத்தாரும் இனங்கண்டு கொண்டார். இருவரும் கட்டியணைத்ததும் அவர்களை முழுமையாக பார்க்க முடியவில்லை. மெதுவாக விடுபட்ட போது “அடகடவுளே என்ர மகள்மாரும் பாதிச் சமணராகிவிட்டார்களோ” என நினைத்துக் கொண்டு

“பிள்ளைகளே என்ன நீங்களும் பாதிச் சமணர்களாக மாறிவிட்டீர்களா?”.

“ஏன் அப்ப இப்பதானே சமண மதம் அழிவடைந்து விட்டது இந்தியாவில் சிலர்தான் வாழ்கின்றனர் என்ற செய்தியை கிட்டதான் பேப்பரில் பார்த்தனாங்கள்”.

வேலாயுதத்தார் “இல்ல மகள்மாரே சமண சமயத்தினர்தான் கடுமையான போக்கு உடையவராக வாழ்ந்தனர். இதனால், அவர்களின் மதம் நின்றுபிடிக்கவில்லை” என்றார்.

பைரவி குறிக்கிட்டு “அதுக்கு என்ன அப்பா எங்களையும் பாதிச் சமணர் என்று சொல்லுறீங்க...”

“இல்ல மகள்மாரே நீங்க உடல் தெரிய பாதி ஆடைகளை போட்டிருக்கீங்க இதுவா எங்கட தமிழர் பண்பாடு? மகாலட்சுமி மாதிரி வருவிங்க என்று நினைத்தனான். ஆனா நீங்க அரைகுறையான ஆடைகளுடன் வந்திருக்கிங்க சமண சமயத்தினர்தான் ஆடையில்லாமல் நிர்வாணமாகத் திரிவார்கள் நீங்கள் எல்லாம் இப்படி பாதி ஆடைகள் அணிந்தா பாதிச் சமணர் என்று சொல்லுறத விட எப்படி சொல்லுறது. இப்படி பொட்டும் வைக்காம பாதி உடலைக்காட்டிக் கொண்டு வந்தா தமிழர் பண்பாடு எதிர்காலத்தில் என்னவகும்......” என்று நொந்து கொண்டார்.

இரண்டு மகள்மாரும் “அப்பா பாதிச்சமணரும் இல்ல முழுச்சமணரும் இல்ல உங்களுக்கு இப்பத்தைய உலகம் தெரியாது இதுதான் இப்பத்தைய “பெஸன்” இது எல்லாம் உங்களுக்கு தெரியாது வாங்க அப்பா வீட்டுக்கு போவம்” என்று அழைத்தனர்.

“தமிழர் பண்பாடு எப்படிச் சீரழிந்து போச்சு இந்த கண்டறியாத வெளிநாட்டுக் கலாசாரத்தினால், கண்டறியாத “பெஸன்” எனக்கா இந்த உலகம் தெரியாது” என்று புறுபுறுத்துக் கொண்டு இரண்டு மகள்மாரையும் ஏற்றிக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

"........பிரிட்டிக்ஷ் அரசாங்கத்தை எடுத்துப் பார் அந்த நாட்டில திருமணம் முடிக் காமலே ஐம்பது சதவிகிதத்துக்கு மேற் பட்ட பெண்கள் குழந்தை பெற்றுக் கொண்டுள்ளனர் என்னடா............"

# சமுதாயம் ஏற்குமா......?

"என்னடா இப்பவும் இந்த எழுதுர வேலையை நிப்பாட்ட வில்லையாட..?"

"இப்ப நான் முந்தி மாதிரி தொடர்ந்து எழுதிறதில்ல ஒரு நாளைக்கு குறைந்தது பத்து சிறுகதைகள் தான் எழுதுவன்"

"இதைக் கேட்டதும் ராகுல் திகைத்துப் போனான். "நான் நினைத்தனான் திருந்திட்டான் என்று ஆனா.....இவன்.....முந்தி இரண்டு மூன்று சிறுகதைகள் தான் எழுதுவான் இப்....ப என்னன்ற பத்து சிறுகதைகள் எழுதுகின்றானாம்..... முதலவிட இப்ப கூடவேதான்.... நீ பொய் பேசுகிற. சரி பரவாயில்ல வா ஒண்டா படிச்ச நாங்கள் கன நாளைக்குப் பிறகு இரண்டு பேரும் கண்டிருக்கம் கடைக்குப் போய் தேத்தணி எதுவும் குடிப்பம்...."

"மச்சான் குமார் கெம்பஸில படிக்கேக்க ஒரு பிள்ளைய காதலிச்ச அது என்ன மாதிரி போச்சிடா...." .....முதல் மாதிரி தான் இப்பவும் அவளுடன் சண்டை போடுறாயா..... இல்லாட்டி காதலிக்க நேரமில்லையினு அவள கலைச்சுப் போட்டாயா....."

"டேய் ராகுல் ஜெய காந்தன்ட பிரளயம் என்ற குறுநாவல் எப்படி மச்சான் நான் உனக்கு அப்பயிருந்தே சொன்னனான் ஒருக்க எடுத்து படி என்று படிச்சியாடா......."

"இப்ப நான் என்ன கேட்டனான் நீயென்னன்டா..... ஏதோ கதைக்க என்னமோ கதைக்கிற. உனக்கு பித்தெதும் பிடிச்சுப் போச்சா. ......முதல்தான் பிச்சக்காரனைப் பற்றி கதையெழுதினா பிச்சக்காரன் மாதிரி திரிவ.... குடிகாரனைப் பற்றி எழுதினா குடிகாரன் மாதிரி திரிவ. காதல் பற்றி எழுதினா காதலனாக காதலியுடன் திரிவ.....

இன்னும் இதொன்றையும் நீ மாற்றிக்கவேயில்லையடா.... பாவம் உன்னால எத்தன பிள்ளையின்ன வாழ்க்கை அநியாயமாகப் போச்சோ தெரியாது. அது எப்படி மச்சான் குமார் உன்னால மட்டும் எல்லாம் முடியுது”

“ ராகுல் இதுக்குத்தான்டா நான் உன்ன சொன்னனான் பிரளயத்தை வாசியென்று. இப்பதான் நீ விசியத்திற்கு வந்திருக்க அது என்னடா சொன்னாய் எத்தன பிள்ளைகளின்ட வாழ்க்கையை அநியாயமாக்கினன் என்று. அடே ராகுல் நான் சொல்லிறத கவனமாககேள். எமது தமிழர் பண்பாட்டில வீரத்துடன் காதலும் அன்று தொடங்கி இன்று வரை இருந்து வருகுது அதை நான் ஏற்றுக் கொள்கின்றன். எமது சமூகம் இன்று வெளிநாட்டு சமூகத்துடன் ஒப்பிடும் போது எங்க மச்சான் இருக்குது பார். காதல், கலியாணம் என்று எமது சமூகம் கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டு பொழுதுபட்டாலும் விடிஞ்சாலும் அதே சிந்தனை. சரி காதலிச்சா கலியாணம் நடக்கும் இல்லாட்டி பிரிவு வரும் இல்லாட்டி மரணத்தைத் தேடி போவம். அப்படியும் இல்லாட்டி அதையே நினைத்து கடைசி வரையும் அப்படியே கலியாணம் கட்டாம இருப்பம். இதால என்னத்த மச்சான் எமது சமூகம் இதுவர சாதிச்சிச்சு. பிரிட்டிஷ் அரசாங்கத்த எடுத்து பார் அந்த நாட்டில திருமணம் முடிக்காமலே ஐம்பது சதவிகிதத்துக்கு மேற்பட்ட பெண்கள் குழந்தை பெற்றுக் கொண்டுள்ளனர். என்டா அந்த நாட்டு இளைஞர்கள் யோசிக்கிறாங்க திருமணச் சடங்கு தேவையில்லை என்றும் இணைந்து வாழ்வதே போதுமானது என நாங்களும் ஏன் மச்சான் அப்படியிருந்தா? அறிவியல் தொழில்நுட்பத்தில முன்னேறலாந் தானே. யோசித்துப் பார் எமது தமிழ்ச் சமூகத்தில காதலிச்சு ஆணோ பெண்ணோ ஏமாந்து போனா பிறகு அவுங்களுக்கு வாழ்க்கையே இல்லாத மாதிரி உலகத்தையே வெறுத்து திரியிறாங்க. மேற்கு நாடுகளில் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு பிறகு ஆணும் பெண்ணும் சேர்ந்து பழகுவாங்க அவுங்களுக்கு பிடிச்சுக் கொண்ட இணைந்து வாழ்வாங்க ஆனா பிடிக்காட்டி விட்டு பிரிந்து வேறு ஒரு நபருடன் பழகலாம். ஆனால் எமது சமூகத்தில அப்படியாடா.... ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து பழகினா கட்டாயம் அவளத்தான் அவன் கட்டனும், அவனத்தான் அவள் கட்டனும் அப்படி கட்டாட்டி ஆணைவிட பெண்ணை தமிழ்ச் சமூகத்தினர் தப்பான கண்ணோட்டத்தில பார்க்கிறாங்க. அதுமட்டுமா அவள அந்த சமூகத்தால ஒதுக்கியே வைக்கிறாங்க. இதால என்ன மச்சான் பயன். கொஞ்சம் யோசித்துப் பார் மேலைநாட்டில கூடிய நேரத்தை

உழைப்பில தான் செலவு பண்றாங்க இங்க அப்படியா பாதி வாழ்க்கை காதல் கலியாணம் அப்படியே போய் பிறகு கலியாணம் கட்டின பின்பு அவங்கட பிள்ளைக்கு சொத்து தேடுவாங்க. கலியாணம் கட்டிவைப்பாங்க இல்லாட்டி காதலிச்சு திருமணம் செய்வாங்க. இது தான் வாழ்க்கை சக்கரம். நான் இப்ப பெண்களோட பழக வேண்டாம் என்று உனக்கு சொல்லல்ல. அதுக்கே எங்கட வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டாம் என்று தான் கூறுகிறன். கொஞ்சம் மரபில இருந்து புதுமைக்கு முழுமையாகப் போகாட்டியும் கொஞ்சம் கொஞ்சமாவது போகலாந் தானே.... சரி இதெல்லாம் உனக்குச் சொல்லி என்ன கிடைக்கப் போகுது. நீ ஆசைப்படுகிற நா காதலிச்ச பிள்ள என்னவா இருக்குதுன்னு சரி அவளும் நானும் காதலிச்சது உண்மை. ஆனா இரண்டு பேரும் ஒவ்வாத முனைகள் மச்சான் அவள் மச்சான் தமிழின் பாரம்பரியத்தில் ஊறித் திளைத்தவள். நான் அப்படி இல்ல என்னால இயன்ற அளவுக்கு நவீனத்த உள்வாங்கிக் கொள்பவன். அதால இரண்டு பேரும் சம்மதத்துடன் பிரிஞ்சிட்டம். அவளுக்கு திருமணம் நடந்து இரண்டு பிள்ளையும் இருக்கு மச்சான். இதிலிருந்து அவளால நான் கண்டபாடம் மச்சான் நவீனத்த கொஞ்சமாவது உள்வாங்கிக் கொண்டாள் என்பதைக் காண முடியுது மச்சான். ஏனன்டா மச்சான் இரண்டு பேரும் சரிவராது பிரிஞ்சம் அவளும் கவலைபடாம திருமணம் செய்து கொண்டாள். நானும் சந்தோஷமாக இருக்கிறன்.. என்ன பொறுத்தவரையில எனக்கு இப்ப காதலிக்கிறதுக்கு நேரமே கிடைக்கிறதுயில்ல மச்சான் இப்படியே எழுதுகிறதிலையே போகுது மச்சான். இந்த சமூகத்தில் ஒருத்தனாவது என்ர எழுத்த வாசித்து திருந்தினா அது தான் எனக்கும் எனது எழுத்துக்கும் கிடைக்கும் வெற்றி”

“அடே அப்பா முன்போட இப்ப நீ நல்லாவே மாறிட்ட சரி உன்னோட இதுவொன்றும் கதைச்சு வெல்ல முடியாது. நீ சொல்லுறதும் எனக்கு புரியுது மச்சான். மரபில ஊறிப்போன சமூகத்தை நீ எப்படி தலைகீழாக நின்றாலும் மாத்த முடியாது. சரி தேத்தணிய குடி எனக்கு நேரமாகுது யாழ்ப்பாணத்திலயிருந்து வந்தது களைப்பாயிருக்கு இப்ப வவுனியாவில இருந்து புறப்பட்டாதான் நாளைக்கு காலையில கொழும்பில இன்ரவியூவ் பேஸ் பண்ண முடியும்...”

“சரி ராகுல் உன்ர வீட்டுக்காரர் எல்லாம் சுகமாக இருக்கிறாங்களா..... தம்பி என்ன படிக்கிறானா....”

“ஓமடா அவன் படிக்கிறான் வீட்டுக்காரர் எல்லாம் சுகமாக இருக்கினம்....”

“ ஏய் மச்சான் ராகுல் வாவேன் எங்கட வீட்ட போயிற்று போவம்”

“அடேய் நான் இப்ப வர நேரமில்ல கொழும்பில இருந்து யாழ்ப்பாணம் போகேற்க உனக்கு போன் பண்ணுர அப்ப வந்து கூட்டிக்கிட்டு போ....”

“சரி வா வெளியில் போவம் இப்ப மூன்று மணிக்கு கொழும்பு பஸ் வரும் உன்ன ஏத்தி விடுகிறன். அடே நல்ல காலம் இந்த பஸ் வந்திட்டு ஏறு. சரி மச்சான் நான் சொன்னத மறந்திறாத”

“என்னத்த மச்சான்”

“அது தான் ஜெயகாந்தன்ட குறுநாவல் பிரளயத்தை கட்டாயம் எனக்காக வேண்டியாவது வாசி....”

ராகுல் பேரூந்தில் ஏறுகின்றான். குமார் தனது துவிச்சக்கர வண்டியில ஏறி வவுனியா நூல் நிலையத்தை நோக்கிப் புறப்படுகிறான். பேரூந்து சிறிது தூரம் சென்றதும் பேருந்தின் வாசலில் நின்றவாறு ராகுல் குமாரைத் திரும்பிப் பார்க்கிறான். “இவனுக்கு பித்து பிடிச்சுப் போச்சோ தெரியாது சீ....சீ..... இவன கண்டதே பெரிய பிரச்சினையாப் போச்சி. வரேக்க போனும் பண்ணக்கூடாது இவன்ட கண்ணில படாம ஊருக்கு போயிடனும் சீ.....சீ......” என புறுபுறுத்துக் கொண்டு உள்ளே சென்று ஆசனத்தில் அமர்கின்றான்.

**"............மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்த அந்த ஊர் மக்கள் எவரும் வெளியில் வந்து பார்க்கவில்லை. நாய்களுக்கு சந்தோஷம் கதவைத் தட்டுகின்றார். பேய் என்று பயந்து கவிதா உலக்கையுடன் வந்து............"**

# கவிதா பைத்தியக்காரியாகின்றாள்



சலசலத்து ஓடிக்கொண்டிருக்கிறது பேராறு. அழகான மாம்பழக்குருவிகள் கீ.....கீ....... என்றவாறு காட்டுக்கொய்யா மரங்களில் தாவிப்பறக்கின்றன. ஆற்றுநீர் வேகமாக ஓடுவதினால் ஆற்றங்கரையில் வெண்மணல் கும்பி கும்பியாக கிடக்கின்றன. ஆற்றுக்குக் குறுக்காக கிடந்த முதிரைக்கட்டையில் அமர்ந்தவாறு இந்த இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டு தூண்டில் மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்தார் கந்தசாமியார் அந்த வெண்மணலில் அமர்ந்திருந்த கந்தசாமியாரின் மனைவி கவிதா பிடித்த மீன்களை பையில் போட்டுக் கொண்டிருந்தாள்.

நாளைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வருவதாகக் கூறினார்கள். கந்தசாமியாரின் இரண்டு தங்கைமார்களும் யாழ்ப்பாணத்தில் ஆறு இல்லாததினால் ஆற்று மீன் அங்கு கிடைக்காது என்ற சிந்தனையுடன் இருவரும் நாளைக்கு பொரித்தும் கறிவைத்தும் கொடுப்பதற்காக மீன்களைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். மாங்குளத்துக்கும் ஒலுமடுவுக்கும் இடையில் ஓடுகின்ற ஆறுதான் பேராறு.

அந்த இரண்டு கிராமத்திற்கும் அந்த ஆற்றினால், கறிவைப்பதற்கு மீனுக்கு பஞ்சமே ஏற்படுவதில்லை. தைப்பொங்கலை அடுத்து வரும் பட்டிப் பொங்கலுக்கு அந்த ஆற்றில் மாடுகளை குளிப்பாட்டுவதற்கு வரிசையாக வருவார்கள் அந்த இரண்டு கிராமத்து மக்களும்

அன்றைய தினம் அந்த ஆற்றில் மக்களினதும் மாடுகளினதும் நடமாட்டம் அதிகமாகவே இருக்கும்.

சில வேளைகளில் இரண்டு கிராமத்து மாடுகளும் ஒன்றையொன்று மோதிக்கொள்வதும் உண்டு. தோல்வி அடையும் மாட்டின் சொந்தக் காரனுக்கும் வெற்றியடையும் மாட்டின் சொந்தக் காரனுக்கும் மோதல் வந்து கடைசியில் கிராமத்தில் உள்ள பெரியார்கள் சண்டையைத் தீர்த்து வைப்பார்கள். இறுதியாக சண்டைப் போட்ட இருவரும் இணைந்தே கள்ளுத் தவறணைக்குச் செல்வார்கள் இது அந்த இரண்டு கிராமத்தினதும் வழமையாகிறது.

இப்படியான பட்டிப் பொங்கலன்று கந்தசாமியார் தனது எருதுகளுடன் பேராறுக்குச் சென்றார். பக்கத்து கிராமத்தில் இருந்து கவிதா, தனது பசு மாட்டுடனும் அதன் கன்றுடனும் வந்தாள். மாங்குளத்தைச் சேர்ந்த கந்தசாமியாருக்கு முப்பது வயது தான் இருக்கும் இன்னும் திருமணமாகவில்லை கட்டுடல் தோற்றம் பார்த்த பெண்கள் காதல் கொள்ளாமல் போகமாட்டார்கள். ஒலுமடுக் கிராமத்தைச் சேர்ந்த கவிதாவும் வடிவில் குறைந்தவள் இல்லை. கண்டோர் காதல் கொள்ளத்தக்க இடையும் மார்பகமும் வட்டமான முகமும் உடையவள். கவிதா யாருடைய துணையும் இல்லாமல் தனியாக வந்ததினால் ஆற்றுக்குள் இறங்கி அந்தப் பசு மாட்டையும் கன்றையும் குளிப்பாட்ட முடியவில்லை. இதை அவதானித்த கந்தசாமியார் அவளுக்கு உதவி செய்கின்றார். பசு மாட்டின் கயிற்றை வாங்கிக் கொண்டு ஆற்றுக்குள் இறங்குகின்றார். இதனால், திகைப்படைந்த கவிதா கன்றுக் குட்டியின் கயிற்றை கைநழுவ விட்டுவிட்டாள். அது ஆற்றுக்குள் ஓடியதைக் கண்டு இவளும் தன்னை மறந்து ஓடி ஆற்றின் நடுப்பகுதியில் கைகளை மேலே நீட்டியவாறு அமிழ்ந்து கொண்டிருந்தாள் இதனைக் கண்ட கந்தசாமியார் அவளை காப்பாற்றி கரையில் ஏற்றினார். அன்று தொடங்கி இருவருக்குமிடையில் காதல் உண்டாகியது. அன்று வீடு திரும்பிய இருவருக்கும் இனம்புரியாத சந்தோஷம்.

ஒலுமடுவில் வசிக்கும் கவிதாவுக்கு தாய் தந்தையர் இல்லை தனது அம்மம்மாவுடனையே வாழ்ந்துவந்தாள். அடுத்த நாளே கந்தசாமியார் அவளின் வீட்டுக்கு பெற்றோருடன் பெண்கேட்டுச் சென்றார். இருவரது விருப்பத்துடனும் இனிதே திருமணம் நிறைவேறியது. திருமணம் முடிந்து இரண்டு வருடங்களின் பின்பு கவிதாவின் அம்மம்மாவும் இறந்து போனதுடன் கந்தசாமியாரின்

பெற்றோரும் காட்டுக்கு விளாம்பழம் பொறுக்கச் சென்றபோது யானை அடித்து மரணமானார்கள். கந்தசாமியாருக்கும் கவிதாவுக்கும் திருமணமாகி ஐந்து வருடங்களாகியும் குழந்தை பிறக்காதது பெரிய குறையாக இருந்தது போய்த்திரியாத வைரவர், அம்மன், முனியப்பர் ஆலயங்கள் ஒன்றும் மிஞ்சவில்லை. இறுதியாக அவர்கள் தங்களுக்கு இனிமேல் குழந்தை பாக்கியம் இல்லை என்றே கருதினார்கள்.

ஒரு கிலோகிராம் மீனுக்கு மேல் பிடித்துக் கொண்டு வீட்டை நோக்கி பயணமானார்கள். வீதியில் ஏறியதும் இராணுவத்தின் வாகனம் வந்து கந்தசாமியாரைக் கைதுசெய்து கொண்டு சென்றது. கவிதா பொடிநடையாக விரக்தியுடன் மாங்குளத்தில் உள்ள வீட்டுக்கு வந்தாள் காட்டுத் தீ போல ஊர் முழுவதும் கந்தசாமியாரை இராணுவம் பிடித்துச் சென்ற கதை பரவியது. பையில் கொண்டுவந்த மீன்கள் சமைப்பாரின்றி குசினியின் மூலையில் கிடந்தன. மீனின் வாசத்தை மோப்பம் பிடித்த பூனை குசினியைச் சுற்றி வட்டமடித்தது. ஊர் மக்கள் அனைவரும் கவிதாவின் வீட்டில் திரள் திரளாக நின்றார்கள்.

மூன்று வருடங்களின் பின்பு கந்தசாமியாரின் பிணம் இராணுவத்தினரால் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இரண்டு கிராமத்து மக்களும் கந்தசாமியார் உயிருடன் இருக்கின்றார் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு பிணத்தைக்கண்டதும் பேரிழப்பாக இருந்தது. கந்தசாமியாரின் முகம் கத்தியால் கிழிக்கப்பட்டு பல அடையாளங்களைக் கொண்டிருந்தது. கவிதா பிணத்தைக் கட்டிப்பிடித்து அலறுகின்றாள். ஒன்றும் அறியாத கணவருக்கு ஏன் இப்படி நடந்தது? என்று நினைத்துக் கொண்டு தலைவிதி கோலமாக தலையை சுவரில் சாய்த்துக் கொண்டிருந்தாள். கந்தசாமியாரின் இரண்டு எருது மாடுகளும் வானத்தைப் பார்த்தவாறு படுத்துக்கிடக்கின்றன. கந்தசாமியார் அன்பாக வளர்த்த வேட்டை நாய்கள் அங்குள்ள மக்களிடம் எதையோ சொல்ல நினைக்கின்றன அவற்றினால் கூறமுடியவில்லை. மக்களுக்கு நாய்களால் எந்த கருத்தினையும் கூறமுடியவில்லை. இதனால் ஆத்திரம் கொண்ட இரண்டு நாய்களும் வானத்தைப் பார்த்து ஊளையிடத்தொடங்கின. இதனைப் பார்த்த ஊர் மக்கள் நாய்களை அடித்து விரட்டினார்கள். கவலையடைந்த நாய்கள் சோகத்துடன் மாட்டுப்பட்டியில் படுத்துக் கொண்டன. ஊர்ப் பெரியார்கள் மரண சடங்குகளைச் செய்து

மாங்குளம் காட்டுச் சுடலையில் கந்தசாமியார் தீயில் ஆகுதியாக்கப்பட்டார். வீடு திரும்பிய அனைவரும் கவிதாவின் வீட்டில் சிறிது நேரம் இருந்துவிட்டு அனைவரும் தங்களது வீடுகளுக்குப் பயணமானார்கள். கவிதாவினால் மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியாமல் வெளிவிறாந்தையில் அமர்ந்திருக்கிறாள். அந்த நேரத்தில் இரண்டு நாய்களும் அவளுக்கு அருகில் ஓடிவந்ததும் தனது இரண்டு கரங்களாலும் இரண்டு நாய்களையும் தடவுகின்றாள். நாய்கள் மீண்டும் எதையோ கவிதாவிடம் கூற எத்தனிக்கின்றன. அவைகளால் முயவில்லை கவிதாவின் முகத்தில் ஏறிப் பாய்கின்றன. சேலையைப்பிடித்து இழுக்கின்றன. கால்களின் கீழ் அடிமையைப் போல கிடக்கின்றன. வாலையாட்டுகின்றன இப்படியாக இரண்டு நாய்களின் ஆக்கினையும் தாங்கமுடியாமல் கவிதா நாய்களை அடித்துக் கலைக்கின்றாள். மீண்டும் அந்த நாய்கள் ஓடிச் சென்று மாட்டுத் தொழுவத்தில் படுத்துக் கொண்டன. இறுதியில் நாய்கள் இரண்டும் இரண்டு எருது மாடுகளுக்கு தாங்கள் கூற நினைத்ததைக் கூறிற்று.

பிடிபட்ட கணவரை எப்படியும் விசாரணை செய்துவிட்டு விடுவிப்பார்கள் என்ற நம்பிக்கையில் அன்று இரவு ஆகாரம் எதுவும் உண்ணாமல் படுக்கைக்குச் சென்றால் கவிதா. அன்றிரவு தனது கணவனுடன் பழகிய இனிய நாட்களே அவளின் கண்கள்முன் நின்றன. நித்திரை வரவில்லை அதிகாலை விடிகின்றது. சூரியன் தனது கதிர்க்கரங்களால் நெற்கதிர்களைக் தழுவுகின்றான். வயது வேறுபாடு இன்றி அனைவரும் வேப்பங்குச்சிகளில் பல்லைத்தீட்டியவாறு அவரவர் வீட்டு முற்றங்களில் அமர்ந்திருக்கின்றனர். பனித்துளிகளின் கனத்தினால் தலைகுனிந்து நின்ற நாணல் புற்கள் மெதுவாக தலையைத் தூக்குகின்றன. கவிதா மெதுவாக எழும்பி கண்களை மூடியவாறு சென்று தனது கணவரின் படத்தில் விழிக்கின்றாள். இரவு புகையிரதத்திற்குப் புறப்பட்ட இருமருமக்களும் மாங்குளம் புகையிரத நிலையத்தை வந்தடைந்தார்கள். மாட்டுவண்டியில் வேலாயுதத்தார் அவர்களை ஏற்றிவரச் செல்கின்றார். வேலாயுதத்தாரை இருவருக்கும் முன்பே தெரியும். இதனால், இருவரும் ஓடிவந்து ஏறிக்கொண்டார்கள். வீடு வந்த இருவரும் யாழ்ப்பாணத்திலிருந்து ஆசையாக கொண்டுவந்த பொருட்களான வேப்பம்பூவடகம், பனங்கிழங்கு, வெற்றிலை, நெல்லி, திராட்சைப்பழம் என்று பல பொருட்களை எடுத்து வைத்து விட்டு அண்ணா எப்படியும் வயலில் தான் நிற்பாரென்று அங்கு ஓடினார்கள்.


அங்கில்லாததைக் கண்டு ஏமாற்றத்துடன் வந்து கவிதாவிடம் கேட்டதும் உண்மையை புரிந்து கொண்டு இடிந்த மண்சுவர் போல அமைதியாகிவிட்டார்கள். அந்த மீன்கள் பை இருந்த இடத்தில் இவர்கள் கொண்டுவந்த பொருட்களும் உண்பாரின்றி கிடந்தன.

அன்று தொடங்கி அவர்களின் வீட்டில் அமைதி நிலவியது. இறுதியாக அந்த மீன்களை நாயும் பூனையுமே உண்டன. இரட்டைப் பிள்ளைகளான சோதியும் ஜீவாவும் யாழ்ப்பாணத்தில் கல்வியற் கல்லூரி படிப்பை முடித்துவிட்டு அன்றுதான் வீட்டுக்குத் திரும்பினார்கள். கந்தசாமியாரின் உழைப்பிலையே இருவரையும் படிப்பித்தார். இருவருக்கும் கவலைதான் எங்களுக்கு உழைத்துத்தந்த அண்ணாவிற்கு நாங்கள் உழைத்து கொடுக்க முடியவில்லை என்று இருந்தும் பிடித்துக் கொண்டு போனவர்கள் விசாரித்துப் போட்டு விடுவார்கள் என்ற துணிவில் இருவரும் வாழ்ந்தார்கள். மாங்குளம் மகாவித்தியாலயத்தில் இருவருக்கும் ஆசிரியர் தொழில் கிடைத்தது. அன்றிலிருந்து இருவரும் உழைத்த பணத்தில் சாப்பாட்டுப் போக மீதிப் பணத்தை அண்ணாவிற்கு கொடுப்பதற்கு சேமித்து வைத்தார்கள். மூன்று வருடங்களாக சேர்த்த பணம் செத்த வீட்டுக்கே பயன்பட்டது.

ஒரு சமயம் இரவு எட்டு மணியிருக்கும் கந்தசாமியாரின் குரலில் கவிதாவைக் கூப்பிட்டுச் சப்தம் கேட்கின்றது. மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்த அந்த மக்கள் எவரும் வெளியில் வந்து பார்க்கவில்லை. நாய்களுக்கு சந்தோஷம் கதவைத் தட்டுகிறார். பேய் என்று பயந்த கவிதா உலக்கையுடன் வந்து கதவைத் திறந்து பார்த்தாள் எதிரே கந்தசாமியார் கவிதாவை கட்டிப் பிடிக்க ஓடிவந்தார் பேய் என்ற பயத்தினால் உலக்கையால் ஒரேயடி மரணமானார். கவிதாவும் மயங்கி விழுந்தாள். நித்திரையில் இருந்த சோதிக்கும் ஜிவாக்கும் எதுவும் தெரியாது? நாய்கள் இரண்டு கந்தசாமியாரை சுற்றிச்சுற்றி ஊளையிடுகின்றன.

இன்றைய உலகம் வளர்ச்சியடைந்து எங்கோ சென்று விட்டது. ஆனால் இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் மூட நம்பிக்கையை விட்டு வெளியில் வராமல் அதற்குள்ளேயே கட்டுண்டு கிடப்பதினால் கவிதாவே தனது கணவனை கொலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படியாக எத்தயோ மூட நம்பிக்கைகள் இந்தக் கிராம மக்களின் மத்தியில் உள்ளன. இவற்றில் இருந்து எப்போதுதான் இவர்கள் வெளிவருவார்களோ தெரியவில்லை.

சம்பவமறிந்த பொலிசார் ஜீப் வண்டியில் அதிகாலை வருகின்றனர். மயக்கம் தெளிந்த கவிதா " ஐயோ எனது மனுசனை நானே அடித்து கொலை செய்து போட்டன்.... ஐயோ...!!" தலையில் அடித்து அலறுகின்றாள் இரு பிள்ளைகளும் அண்ணாவைக் கட்டியணைத்து அழுகின்றனர். பொலிசார் நடந்த சம்பவத்தினை கூறுகின்றனர் பெயர் பட்டியல் மாறுபட்டதினால் கனகசாமி என்பவரின் பிணம் தவறுதலாக உங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டது. கனகசாமியின் சொந்தக்காரர் எவரும் இங்கு இல்லை என்ற கருத்தினையும் கூறினார்கள் இதனைக் கேட்ட கவிதா பைத்தியக்காரியாக மாறுகின்றதுடன் கணவனை கொலை செய்த குற்றத்திற்காக பொலிசாரினால் கைது செய்யப்படுகின்றாள். ஜீப்பில் கைது செய்யப்பட்ட கவிதாவை ஏற்றிச் செல்கின்றார்கள். சோதியும் ஜீவாவும் திகைத்துப் போய் நின்றனர். சில வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட கவிதா இன்று பைத்தியக்காரியாக தெருக்களில் சுய அறிவில்லாமல் திரிகின்றாள். இப்போது கவிதாவிற்கு ஆற்றங்கயரயே வீடாகிவிட்டது



"...........சரி என்ன செய்றது. படிச்சு முடியும் மட்டும் பொழுது போக்க கொஞ்ச நாளைக்கு காதலிப்பம் திடீரென்று அவனோட........."

# நீ எனது காதலிமட்டுந்தான்........



காதலன் பொய்யா. காதலி பொய் யா. காதல் பொய்யா என்று தெரியா மல் தடுமாறினான் கந் தன். இறுதியாக ஒரு முடிவெ டுத்தான். காதலிதான் பொய் யென்று. சந்தேகம் கொள்ளக் கூடாது என்பது உண்மைதான். நேரில் கண்ட சம்பவத்தினை எப்படி இல்லையென்று சொல்வது? காதலன் காதலிக்கு இருக்க வேண்டிய அம்சங்களும் பண்புகளும் பலவுள்ளன. அவற்றில் இருவரும் பொய் கூறாமல் வாழ்ந்தால் அந்த காதல் இறுதிவரை வாழும். இருவரும் புரிந்து கொள்ளாமல் வாழ்ந்தால் அந்த காதல் நிரந்தரமானதல்ல என்ற தத்துவத்தினை இரண்டு வருடமாக காவியாவை காதலித்ததில் இருந்து விளங்கிக் கொண்டான் கந்தன்.

பத்தாம் வகுப்பில் படிக்கும் போது காவியாவுக்கும் கந்தனுக்கும் காதல் ஏற்பட்டது. காதல் ஏற்பட்ட தொடக்க காலத்தில் இருவருக்கும் கொண்டாட்டந்தான். இருவரும் வெளிமாவட்ட மாணவர்கள் தான். இதனால் விடுதியில் தங்கி படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பாடசாலையில் நடந்த விளையாட்டுப் போட்டியில் கந்தனின் விளையாட்டுத் திறமையைப் பார்த்தே காவியாவுக்கு காதல் ஏற்பட்டது.

காதலித்த காலத்தின் தொடக்கத்தில் இருவரும் முதன்முதல் சந்தித்த இடம் ஆனைக்கோட்டையில் அமைந்த வீடொன்றிலையே சந்தித்துக் கொண்டார்கள். இரண்டு தென்னை மரங்களும் நான்கு மாம்மரங்களும் மூன்று பாக்கு மரங்களும் அந்த வீட்டைச் சுற்றி நின்றன.

"வாங்க யாருமில்ல நான் நினைத்தன் நீங்க வர மாட்டிங்க என்று. எப்படியோ வந்திட்டிங்க. இப்படி இந்த கதிரையில் இருங்க. தனிய என்ன பாக்க எப்படி உங்களுக்கு துணிவு வந்திச்சி? நாங்க ரெண்டு பேரும் பழகி பதினைந்து நாள். நான் கேட்டதும் வந்திட்டிங்க......"

மெல்லிய நாணலுடன் காவியா "எனக்கு உங்கள பிடிச்சிருக்கு கலியாணம் கட்டினா உங்களத்தான் கட்டுவன். இல்லாட்டி கலியாணம் இல்லாம தனியாகவே வாழ்வேன்....."

பக்கத்து வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நின்றது இதைக் கண்ட காவியா " நீங்களும் இப்படித் தானே படிச்சு முடிஞ்சா கொஞ்ச நாளில கார்ல வருவிங்க....." என்றதும் கந்தனின் சிந்தனை திடுக்கிட்டது.

"காவியா என்னை உங்களுக்கு முழுமையாகத் தெரியாது என்ர குடும்பம் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பம். எனது சொந்த உழைப்பிலத்தான் நான் படிக்கிறன். மற்றவங்க மாதிரி நான் உழைக்கிற உழைப்பில எனக்கு பந்தா காட்டத் தெரியாது. உங்கள பிடிச்சிருந்திச்சு நானும் கேட்டன். நீங்களும் ஓம் என்று சொன்னீங்க. அது சரி என்ன மேலோட்டமாகப் பார்த்து நீங்க நான் ஏதோ பணக்காரனு நினைச்சுப்பிட்டிங்க. எனக்கு அப்படியான பணவசதியெதுவும் கிடையாது. வீட்டுக்காரர் உழைக்கிற காசு வீட்டுச் செலவுக்கே பத்தாது. என்ட உழைப்பு எனக்கே பத்தாது. ஆனா உங்கள என்னால அவ்வளவு வசதியாக வைத்திருக்காட்டியும் சந்தோஷமாக வைத்திருப்பன்......"

"சரி இப்ப நான் இதுவெல்லாமா கேட்டனான். அதெல்லாம் பிறகு பார்ப்பம் ஒரு மணியாச்சி கடைக்குப் போய் சாப்பாடு வாங்கிட்டு வாங்க...... நான் இங்க இருக்கிறன்......"

கந்தன் சாப்பாடு வாங்குவதற்காக தனது துவிச்சக்கர வண்டியில் புறப்படுகின்றான். கதிரையில் அமர்ந்திருந்தவாறு மேசையில் தலையைச் சாய்த்த வண்ணம் காவியாவின் சிந்தனையோட்டம் ஓடுகின்றது. "இவன் கஷ்டப்பட்ட பெடியன் சீ...சீ... இவன்ட விளையாட்டுத் திறமையைப் பார்த்து மயங்கிப் போனனே. அப்பவே நான் நினைத்தனான் இரண்டு சேட்டை மாறி மாறி போடேக்கவே.

சரி என்ன செய்றது. படிச்சு முடியும் மட்டும் பொழுது போக்க கொஞ்ச நாளைக்கு காதலிப்பம். திடீரென்று அவனோட கதைக்காம விட்டா பைத்தியம் பிடிச்சாலும் பிடிச்சிடும் அவனுக்கு. அவன காதலிக்கிறனும் பள்ளிக் கூடத்தில பெருமையாகப் பேசுறாங்க. எப்படினாலும் அவன் விளையாட்டு வீரனல்லவா....படிக்கிற காலத்துக்கு இவனோட பழகிட்டு பிறகு கலியாணம் கட்டேக்க நல்ல வடிவான பணக்காரனப் பார்த்துக் கட்டுறது தானே....."

கந்தன் வறுமையான குடும்பத்தில் பிறந்ததாலும் நீதி, நேர்மை, நியாயம் என்ற வகையில் சிறந்து விளங்கினான். காவியாப் போன்ற அழகிய பெண் தனக்கு காதலியாகக் கிடைத்ததை நினைத்து சந்தோஷப்பட்டதுடன் அவனுக்கு இவளைக் காதலித்த நாளில் இருந்து ஒரே குதுகலம். காவியாவுக்கு எந்த தீங்கும் அவன் மனசால் கூட நினைக்கவில்லை. ஆறுமாதம் கந்தன் சந்தோஷமாக ஆடிப்பாடித் திரிந்தான். காதலித்து ஆறு மாதத்திற்குப் பிறகு தான் காதலில் பூகம்பம் வெடிக்கத் தொடங்கியது.

காவியா விடுமுறையில் வீட்டுக்குப் பயணமான போது காவியா இரண்டு பெட்டிகளை கந்தனிடம் கொடுத்து விட்டு தான் வந்து எடுப்பதாக கூறிச் சென்றாள். என்ன என்ன சாமான்கள் வைத்திருக்கிறாள் என்று பார்ப்பதற்காகப் பூட்டை உடைத்துப் பெட்டியைத் திறந்து பார்த்த போது மூன்று கடிதங்கள் கந்தனின் கையில் சிக்கின. அதுவும் கொப்பி உறைக்குள் இருந்தது. அவனுக்கு சந்தேகத்தை கிளறி விட்டது. இரத்தம் கொதிக்கத் தொடங்கியது. பல சிகரெட்டுக்கள் அவனது கோபத்தை ஓரளவு தணித்தது. "ஏன் இப்படி பொய் சொன்னாள். தான் இதுவரையாரையும் காதலிக்கவில்லை என்று. நான் தொடக்கத்தில கேட்டனானே. உனக்கு யாராவது லவ்லேட்டர் தந்தாங்களா என்று. என் தலையில் அடித்து சத்தியம் செய்தாளே. 'நான்
யாரையும் முன் காதலிக்கவும் இல்லை. எனக்கு யாரும் லவ்லேட்டர் தரவுமில்லை. இந்த ஆண்களே இப்படி தான்' என்று சொன்னாளே. ஏன் இப்படி பொய் சொன்னாள் என்று எனக்குதெரியவில்லையே. கடவுளே ஏன் என்ன இப்படிச் சோதிக்கிறாய்...." என்று தனியாக அறைக்குள் இருந்தவாறு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டு சுவரைப்பாத்து கதைத்துக் கொண்டிருந்தான்.

கோழி புரியாணியுடன் கந்தன் வீட்டை நோக்கி களைக்க களைக்க வருகின்றான். படலைச் சத்தம் கேட்டதும் மேசையில் படித்திருந்த காவியா கண்விழித்துக் கொண்டாள். கந்தன் ஊட்டிவிட காவிய சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டாள். பாவம் கந்தன் இவள் கந்தனைக் காதலிக்க வில்லை. அவனது விளையாட்டுத் திறமையைக் காதலிக்கிறாள் என்று எப்படி புரியும்? அழகான பெண்களைக் கண்டு மயங்கினால் இது தான் நிலை. அழகிருக்குமிடத்தில் பாசமிருக்காது. அப்படியிருந்தாலும் அது நீடிக்காது. அழகு ஆபத்தானது என்று இவனுக்கு விளங்கவில்லை என்ன செய்வது.?

திடீரென்று எழுந்த கந்தன் சிகரெட்டை தூக்கி எறிந்து விட்டு அவளுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தான் என்றுமே அவளை மரியாதை குறைவாகப் பேசாதவன் அன்று பேசிவிட்டான். "ஏய் காவியா உனக்கு யாரும் காதல் கடிதம் தரவில்லையினு சொன்னியே. அது என்னடி 'நாங்கள் இருவரும் மனதால் ஒன்று பட்டோம் எனது வறுமையால் என்னை வெறுக்கின்றாய்' அது யாரு விஜயன்...." என்றதும் திகைத்துப் போனாள் காவியா. "உன்ர சாமான் எல்லாம் தாரன் நீ எடுத்துக்கிட்டுப் போ" எனக் கூறி தொலைபேசியைக் கட் பண்ணிவிட்டான் கந்தன்.

அடுத்த நாள் அவசர அவசரமாக வீட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்த காவியா இவன் கோபத்தில் ஏதாவது செய்துப் போடுவான் என்று தெரிந்ததும் நேரில் சந்தித்து.

"இஞ்ச பாருங்க ப்ரெண்ஸ்சா பழகிட்டு அப்படி இப்படி கடிதம் எழுதி தருவாங்க அதெல்லாம் இப்படி நினைக்கிறதா....."

"இல்ல இந்த நீ வாங்கித் தந்த சேட் சாமான் எல்லாம் இருக்கு எடுத்துக்கிட்டு போ இனிமேல் என் கண்ணில் படாத....."

இருவரும் உணவு உண்ட பின்னர் சிறிது நேரம் ஒரே பாயில் ஒரே தலையணையில் ஒரே போர்வையில் படுத்துக் கொண்டார்கள். கந்தன் அவளை இறுக்கமாகக் கட்டிப் பிடித்துக் கொண்டு முதல் முத்தம் இடக்கன்னத்தில் கொடுக்க வேண்டும் போல நினைத்தான். இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தவாறு "சரி என்ர பிறந்தநாளுக்கு சேட் வாங்கித் தந்திங்க வேற என்ன தருவிங்க..." என்றதும் காவிய போர்வையை விலத்தி விட்டு கந்தனின் இடக்கன்னத்தில் முத்தமிட்டாள். அவனுக்கு ஒரே சந்தோஷம்.

சேட்டைக் கொடுத்து கலைத்து இரண்டு கிழமையாகி விட்டது. கந்தனால் அந்த முதல் முத்தத்தையும் அவளையும் மறக்க முடியவில்லை. என்ன செய்தாலும் அவளின் ஞாபகம் வந்து கொண்டேயிருந்தது. விளையாட்டிலும் படிப்பிலும் கோட்டை விட்டு மூன்றுமாதம். குடியும் வெறியுமாக வீதியில் திரிந்தான். அவளுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து "நீங்க இல்லாட்டி என்னால வாழ முடியாது...." என்று அவளின் பாதங்களில் விழாத குறையாகக் கெஞ்சினான். மீண்டும் காதல் சோடிகள் இணைகின்றன. ஆனால் கந்தன் காவியாவின் கைப் பொம்மையாகவே இருந்தான். சக மாணவர்கள் இவனைக் கேலி செய்தார்கள். இவள் பேசுவது எல்லாம் பொய் என்றும் இவள் என்னைக் காதலிக்கவில்லை. எனது விளையாட்டுத்திறமையைத்தான் காதலிக்கின்றாள் என்றும் படிப்படியாக கந்தன் விளங்கிக்கொண்டான்.

கந்தனைச் சுற்றி பெண்கள் கூட்டம். ஓட்டோக்கிராப்புடன் "இந்தாங்க இதில ஒரு சையின் போட்டுத் தாங்க....." என்று கெஞ்சிய வண்ணம் உள்ளனர்.

மீண்டும் இணைந்த காதல் ஜோடிகள் காவியாவின் கெட்டக்குணத்தாலும் அவள் பேசின பொய்களாலும், நண்பர்கள் என்று சொல்லி சொல்லி பல மாணவர்களுடன் தீய வழியில் சென்றதாலும் கந்தனின் மனம் காவியாவை மறக்கத் தொடங்கின்றது. பலவாறு சிந்திக்கத் தொடங்குகின்றான். ஏன் இவள் என்னை ஒரு மனிசனாகக் கூட மதிக்கல? தன் அழக வைத்துக் கொண்டு என்னை இந்த ஆட்டு ஆட்டுகின்றா.... எப்படியாவது இவள மறக்க வேண்டும் என்று அவளை மறக்கத் தொடங்குகின்றான்.

போர்வையில் கிடந்த இருவரும் நித்திரையாகி விட்டார்கள். இருவரும் திடுக்கிட்டு கண்விழித்துப் பார்த்த போது நேரம் மாலை ஆறு மணியைத் தாண்டி இருந்தது.

" இஞ்ச கந்தன் கொஸ்டலில போடன் தேடப்போறார் நான் போட்டு வாறன்"

கந்தனால் காவியாவை பிரிய முடியவில்லை. "சரி போயிட்டு வாங்க" என்று வழியனுப்பி வைக்கின்றான். இந்த சந்திப்புத்தான் காவியாவை சந்தோஷமாக கந்தன் சந்தித்த சந்திப்பு இதற்கு பின்னர் நடந்த சந்திப்பெல்லாம் ஒரே சண்டையும் சச்சரவுமாக இருந்தது.

இறுதியில் அவளை முற்றாக மறந்து தனது விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடுகின்றான். அவனது கடும் முயற்சியில் நீளம் பாய்தல் போட்டியில் தேசிய மட்டத்தில் தெரிவாகி ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்தினைத் தட்டிச் செல்கின்றான்.

காவியா பல நண்பர்களுடன் பழகி அவளது வாழ்க்கையை பாலை வனமாக்கிப் போட்டாள். பலரைக் காதலித்தாள். ஆனால் அவர்கள் எவரும் இவளைக் கலியாணம் கட்டுவதாக தெரியவில்லை. ஊர் அவளைப் பார்த்து தப்புத்தப்பாக கதைத்தது. "நீ கந்தன காதலிச்ச தானே...அவன விட்டுட்டு வந்த எப்படி உன்ன நம்பிறது....?" என்று கதைத்து அவளைக் கழித்து வைத்தனர்.

ஒலிம்பிக் போட்டி முடிந்து வந்து கொழும்பில் இறங்கிய கந்தனைச் சுற்றிய அந்த பெண்கள் கூட்டத்துக்கு சைனை வைத்துக் கொடுத்து மெது மெதுவாக நகர்கின்றான். வாடி வதங்கி மெல்லிய தோற்றத்துடன் ஒரு பெண் ஓட்டோக் கிராப்புடன் கந்தனை நோக்கி வருகின்றாள். அவள் தலையை நிமிர்த்தியதும் " அட கடவுளே காவியா....." என் மனதுக்குள் நினைத்துக் கொண்டு அத்தனை பெண்களையும் விலத்திச் சென்று காவியாவின் ஓட்டோக்கிராப்பை வாங்கி ஏதோ எழுதி கொடுக்கின்றான். அதற்குள் எங்கிருந்தோ வந்த கந்தனின் மனைவி தீபா "இஞ்ச வாங்க அப்பா கெதியா போனாத்தான் வவுனியா போகலாம்" என்றவாறு கார் கதவைத் திறக்கின்றாள். காவியாவைப் பார்த்தவாறு காரில் ஏறுகின்றான் கந்தன் கார் கதவு மூடப்பட்டதும் கார் புறப்பட்டது. காவியா ஓட்டோகிராப்பைத் திறந்து பார்க்கின்றாள். " அன்பின் காவியா நீ என்றும் எனது காதலிதான் ஆனால் எனது மனைவியாக முடியாது ஏனென்றால் நான் இன்னுமொரு பெண்ணுக்கு கணவனாகி விட்டேன். நீ எனக்கு மனைவியாக வேண்டிய காலம் கடந்து விட்டது" இதை வாசித்ததும் அவளின் கண்களில் கண்ணீர்த் துளிகள் ஆறாகப் பெருகின. அழுதவாறு வீதியின் எதிர்ப்பக்கமாக நடக்கிறாள்.



'படைப்பாளிகள் சமூகத்தில் இருந்து
விலத்தியவர்கள் அல்ல
சமூகத்துடன் இணைந்த சாதாரண மனிதர்களே!'



இந்த சிறுகதைத் தொகுதி பற்றிய உங்கள் விமர்சனங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: 89/7, ஸ்ரீநகர் பூந்தோட்டம்
வவுனியா.
இலங்கை.
T.P:0779776279

**"...அங்கு தமிழர் தொடக்கம் சிங்களவர் வரை என்னில் அவங்கட இச்சையைப் போக்கிக் கொண்டவர்கள் இப்ப நான் அங்க இருந்துதான் தப்பி வாறன்..."**

# வாழத்துடிக்கும் இளங்கிளி

கண்டி புகைவண்டி நிலையத்தில் இருந்து வவுனியாவை நோக்கி புறப்படும் பேரூந்து ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. பாட்டியின் வீட்டுக்குச் சென்ற ரவி மின்னல் வேகத்தில் ஓடிவந்து ஏறிக்கொண்டான்.

மலைநாடு என்றதினால் இதமான தென்றல் காற்று வீசிக் கொண்டிருந்தது போகப்போக பேரூந்தின் வேகம் கூடிக்கொண்டே போனது ரவிக்கு மலைநாடு எதுவும் புதிதில்லை.



மலைகளின் மேல் இருந்த தேயிலைச் செடிகள் எல்லாம் மழைத்துளிகளைத் தாங்கிய் வண்ணம் அங்குமிங்குமாக ஆடிக்கொண்டிருந்தன. தலையில் முக்காடு போட்டதுணியுடன் பின்புற முதுகில் கூடையுடன் வயது வேறுபாடு இன்றி பெண்கள் தேயிலைக் கொழுந்துகளைப் பறித்துக் கொண்டிருந்தனர். இடைஇடையே கண்ணுக்குத் தெரியும் ஆறுகளில் சலசலவென நீர் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. சில இடங்களில் உள்ள மலைகள் மேகக் கூட்டங்கள் போல காட்சியளித்தன "ஆஹா.....ஆஹா...." என்ன காட்சி என்று ரவி களிப்புடன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

தெல்தோட்டைக்கு பேரூந்து வந்ததும் ரவி இயற்கை காட்சிகளில் இருந்து விடுபட்டான் "அடேய் ரவி நீ எனக்கு இந்த உண்மையை தொடக்கத்திலையே சொல்லியிருந்தா அவள நல்ல இடத்தில வேலைக்கு சேர்த்திருப்பேன்" என எப்போதோ ரவியின் தந்தை கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

ரவி யாழ்பல்கலைக்கழகத்தில் படிப்பவன். ஒரு வருடத்திற்கு ஒரு தடவை வவுனியாவில் உள்ள வீட்டிற்கும் கண்டியில் இருக்கும் பாட்டியின் வீட்டிற்கும் செல்வதுண்டு.

தந்நை கூறியதை கேட்ட ரவி திகைத்து நின்றான் "என்...ன நடந்தது...." இவரின் தந்தை மித்திரன் பத்திரிகையைத் தூக்கி முன்னுக்குப் போட்டார்.

"இவளுக்காக பிரார்த்திப்போம்" என்று கொட்டைஎழுத்தில் கிடந்ததைப் பார்த்து திகைத்துப் போனான். மாமனாரினால் ஐந்து இலட்சம் ரூபாய் பணத்திற்காக விற்கப்பட்ட இவள் தனக்கு நடக்கும் கொடுமையை தட்டிக்கேட்க யாருமில்லையா? என எண்ணி இவளை அனுபவிக்க வந்த முதலாளியை சாராய போத்தலினால் குத்தி மனநோயினால் பாதிக்கப்பட்டு மனநோய் மருத்துவ மனையில் இருக்கிறாள். அவளது மாமனாருக்கு கடும் காவல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவளின் நலனுக்காக அனைவரும் பிரார்த்திப்போம்" என்று பத்திரிகையில் அவளின் படத்துடன் பார்த்து ஒரு வருடம் பூர்த்தியாகியும் நேற்று இன்று நடந்தது போல இருந்தது அவனுக்கு.

பயணம் செய்து கொண்டிருக்கும் போதே அந்தநாள் ஞாபகங்கள் துளிர்விடத் தொடங்குகின்றன. இவன் அமர்ந்திருந்த ஆசனத்தின் பின்பக்கத்தில் முஸ்லிம் பெண்ணொருத்தி அமர்ந்திருந்தாள். வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டதைப் போல அந்த இளமையான வதனம் சோகத்தில் வாடிக்கிடந்தது. அவளின் அருகில் இருந்த சிங்களவன் அவனின் இடுப்பைத் தட்டிக் கொண்டிருந்தான். அவள் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினாள். ரவிக்கு சந்தேகம் வந்து விட்டது ஏன் இவள் சத்தம் போடாமல் உடலால் மட்டும் வெறுப்பைக்காட்டிக் கொண்டிருக்கின்றாள்? ஒரு நகரத்தில் பேருந்து நின்றதும் ரவிக்கு பக்கத்து ஆசனத்தில் இருந்த சிங்களப் பெண்ணொருத்தி இறங்கினாள். பின் ஆசனத்தில் இருந்து விடுபடப் போராடிக்கொண்டிருந்த அந்த முஸ்லிம் பெண் தவளை பாய்ந்ததைப் போல பாய்ந்து ரவிக்கு அருகில் வந்து அமர்ந்து கொண்டாள்.

இவளைப் பற்றி அறியத் துடித்துக் கொண்டிருந்த ரவி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான். தலையைத் திருப்பாமல் கடைக்கண்ணால் அவளைப் பார்க்கின்றான். அவள் ஏதோ எந்த

மனிதரையும் பிடிக்காதவளைப் போல ஏதோ யோசித்த வண்ணம் இருக்கிறான்.

"ஓடித்திரிந்து வாழ வேண்டிய இந்த இளம் வயதிலும் வடிவில் எந்த விதத்திலும் குறைவில்லாத இவள் சிவந்த பளபளப்பான கன்னத்தைக் கொண்ட இளங்கிளியைப் போல இருக்கின்றாள். இவளுக்கு உறவினர்கள் யாருமில்லையா? கெட்டவளாக இருப்பாளோ? சீ.....சீ... அப்படியிருந்தால் அந்த சிங்களவனின் செயலுக்கு உடந்தையாகப் போயிருப்பாள்" என ரவியின் சிந்தனையோட்டம் ஓடியது. மெல்லமெல்ல கதையைக் கொடுக்க ஆரம்பித்தான் "அக்கா எங்க போறீங்க? தனியாகவா வந்தீங்க யாரும் உங்களுடன் வரவில்லையா......?

மழைக்கு ஒதுங்கிய கோழியைப்போல கூனிப்பிடித்துக் கொண்டு "நான் திருகோணமலைக்குப் போறன்" என படக்கெனபதில். அந்தப் பிஞ்சுகிளியின் இனிமையான குரல் ரவியை ஒரு கணம் திகைக்க வைத்தது.

"உங்கட பெயர் என்ன?" என்று ரவி பலதடவை கேட்ட பிறகுதான் "றசீமா..." என்றாள். பின்னர் ரவி பல கேள்விகளைக் கேட்டும் அவள் மௌனத்தின் மீது காதல் கொண்டவள் போல மௌனமாக இருந்தாள். பருந்தைக் கண்ட கோழிக்குஞ்சைப் போல ஒவ்வொரு நகரமும் வந்து வந்து போக பயந்து பயந்து வந்தாள்.

அநுராதபுர நகரம் வந்ததும் மத்திய பேரூந்து நிலையத்தில் தேநீர் குடிப்பதற்காக பேரூந்து நிறுத்தப்பட்டது. எல்லோரும் தேநீர் அருந்துவதற்காக இறங்கிச் சென்றார்கள் இவள் மட்டும் தனியாக இருந்தாள்.

"அக்கா வாங்க தேத்தண்ணி குடிச்சிட்டு வருவம்" என ரவி எவ்வளவு கேட்டும் அவள் வருவதாக அவனுக்குத் தெரியவில்லை. இறுதியில் ரவி தனியாகச் சென்று தேநீர்குடித்து விட்டு அவளுக்காக யூஸ் பக்கட் ஒன்றைவாங்கிக் கொடுத்தான். அவளும் எந்த மறுப்பும் தெரிவிக்காமல் வாங்கிக் குடித்தாள்.

பதினைந்து நிமிடம் கழிந்ததும் பேரூந்து புறப்பட்டது. ரவியால் இன்னும் பொறுமையாக இருக்க முடியவில்லை தனக்கே உரியபாணியில் கதைக்க தொடங்கினான்.

"என்ன அக்கா ஒரு மாதிரி இருக்கிறீங்க உங்களுக்கு என்ன நடந்திச்சு? பயப்பிடாம சொல்லுங்க எதாவது பிரச்சினையாக இருந்தா அதை நாலு பேருக்கிட்ட சொன்னாதான் சுமை குறையும் அதை விட்டிட்டு இப்படி சோகமா எல்லாம் அடக்கி வைத்தா ஆகப்போறது ஒன்றுமில்லை நான் எதுவும் கெட்டவன் இல்ல பயப்பிடாம சொல்லுங்க என்னால இயன்ற உதவி செய்கிறேன்."

தமிழர், சிங்களவர், ஆங்கிலேயர், முஸ்லிம்கள் என்று பல ஆடவர்கள் இவளின் வாழ்க்கையைத் தீக்கறையாக்கினார்கள். ரவி அவ்வாறு கூறியது தான் தெரியும் அதிக மது போதையில் இருப்பவன் வாந்தி எடுத்தவனைப் போல தனது சோகக் கதையைக் கூறத் தொடங்கினாள்.

"எமட்டு சொந்த இடம் வவுனியாவில் உள்ள பட்டானிச்சூர் சின்னவயசிலையே இனச்சண்டையால பெத்தோர் எல்லாம் மவுத்தாப் போனார்கள். பேந்து எனக்கு ஒரு வயசு தொடங்கி மாமாதா என்னை வளர்த்தாரு.

நா பெரியர்ளாகி பருவமாகியதும் என்னை ஒரு ஆம்பளைக்கு திருமணம் கட்டிவைக்கிறண்ணு கொண்டு போய் என்னை அங்கு விட்டுட்டு ஐந்து இலட்சம் காசை வாங்கிக்கிட்டு வந்தாரு. நான் அங்க தனியாக இருக்க பயந்தேன்.

ஒரு ராத்திரி "மொனவத ஓன ஒய ஆதரே" என்று சத்தம் கேட்டது அன்று தான் எனக்குத் தெரியும் சிங்களவன் வீடு என்று நா தனியாக இருந்த அறைக்கு வந்து என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். வீட்டுக்கார உம்மா லைட்ட நிபாட்டிட்டா..எனக்கு எங்க ஓடுறதுனே தெரியல கடைசியில அவனுக்கு இரையாகிப் போனன். எனக்கு அதிகளவு சிங்களமும் தெரியாது அப்ப எனக்கு பத்தொன்பது வயசு. சரி திருமணம் செய்யப் போகிறவன் தானே என்று மனசுக்குள் நினைச்சு அமைதி கொண்டன்.

ராத்திரி முடிஞ்சி விடிஞ்சி. தூக்கத்தில் கிடந்த நா எழுட்டு உடுப்ப சரி பண்ணிக்கிட்டு எழுந்தன். அங்கு அவனைக் காணவில்லை. சிறிது நேரத்தில் வெள்ளைபிரம்புடன் ஒருவன் தட்டித்

தட்டி என்னருகில் வந்தான். அவன்ட குரலை வைத்து யார் என்று கண்டுகொண்டாள்? அப்பதான் தெரியும் இவனைத்தான் கட்டிவைக்க போறாங்க என்று. இராணுவத்தில் இருந்து இவனுக்கு கண்ணில் வெடிபட்டு இரண்டு கண்களும் இல்லாதவனிடமா? எனது கற்பை பறி கொடுத்தனான்? சரி இவன் தான் என் மனுஷன் என்று யோசித்து அவனுடன் வாழ நினைத்தேன். மாமாவோட வாழ்க்கையும் எனக்கு நிம்மதியில்லை இங்கையும் நிம்மதியில்லை. என்னை மாமா காசுக்கு வித்திருக்கிறார் என்று பிறகுதான் விளங்கிக்கொண்டாள்.

அந்த ஓய்வு பெற்ற இராணுவ வீரன். அவன் தனது காமத்தைப் போக்க என்னை கருவியாகப் பயன்படுத்தியது போக அவன்ட கூட்டாலிமாரையும் கூட்டிக் கொண்டு வந்தான். வீட்டுக்கார உம்மாவும் கொடுமை செய்தாள். பாலில் எதையே போட்டுத்தந்து எனது தாய்மையை இல்லாமாக்கிப் போட்டாள்.

என்னை எப்படி இஞ்ச இருந்து காப்பாற்றிரது என்று தெரியாம கடைசியில் இரவோடு இரவாக அங்கிருந்து ஓடி திருகோண மலையில் உள்ள சிநேகிதியின் வீட்டில் தஞ்சம் புகுந்தேன். எப்படியோ எமுட்டு மூன்று வருஷ வாழ்க்கை போயிற்று.

ஒரு பின்னேர நேரத்தில் கடல் கரைக்கு வந்தனான். அங்க வந்த மாமா என்னைக் கண்டுவிட்டார். நான் தப்பித்து ஓட நினைத்தனான். ஆனா அவர் என்னை பிடிச்சு கொண்டு வந்திட்டார். மாமாவும் மாமாவிட மனிசியும் என்னை வேலைக்காரியாக வைத்திருந்தார்கள். என்னை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கிறன் என்று சொல்லி விமானத்தில் ஏற்றி வானத்தில் ஒரு வட்டம் அடிச்சிட்டு கொழும்பில உள்ள விடுதியில் என்னை ஐந்து இலட்சத்துக்கு வித்துப்போட்டார்.

அங்கு தமிழர் தொடக்கம் சிங்களவர் வரை என்னில் அவங்கட இச்சையைப் போக்கிக் கொண்டார்கள். இப்ப நான் அங்க இருந்து தான் தப்பி வாறன். மீண்டும் என்ர சிநேகிதியிடம் போவம்...." தனது கதையைக் கூறி முடித்தாள்.

ரவியின் கண்களில் கண்ணீர்த்துளிகள் சொரியத்தொடங்கியன. இவளின் சோகக்கதையைக் கேட்டதும் அவன் படும் வறுமை எல்லாம் சிறிய பிரச்சினையாகத் தெரிந்தது. இருந்தும் இவனால் இவளை அவனுடைய வீட்டில் வைத்துக்

காப்பாற்ற முடியாது அப்படி காப்பாற்றினாலும் இந்த சமூகம் அவனை ஏற்றுக் கொள்ளாது.

அவளிடம் என்ன கதைப்பதென்று தெரியாமல் "நீங்க என்ன படிச்சீங்க....?"

" நா O/L வரை தமிழ் பாடசாலையில் படிச்சன் அதுக்கப்புறம் என்னை படிக்க அனுப்பவில்லை." கண்டியில் புறப்பட்ட பேரூந்து எப்படி வவுனியா வந்தடைந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை. ரவிக்கு இவளைத் தனியாக விட்டுப்போக மனமில்லை. அவளும் அவனை விட்டுப்போவதாக தெரியவில்லை. ரவியின் வீடு கூப்பிடுத் தூரமளவுதான். திருகோணமலைக்கு மாலையில் பேரூந்து இல்லாததினால் அவளையும் அழைத்துக் கொண்டு நடக்கின்றான். மேகக்கூட்டங்கள் ஏதோ பாதை காட்டுவதைப்போல முன்னே ஓடுகின்றன. இவர்கள் வீடு போய் சேரும் மட்டும் கருமுகில்கள் மழையைத் தாங்கிக் கொண்டிருப்பதைப் போல தென்படுகின்றன.

இருவரையும் கண்ட ஊர் "படிக்க அனுப்புனவன் போயிட்டு ஒரு சோனபிள்ளையை தள்ளிக்கிட்டு வந்திட்டான்" என தப்புத்தப்பாக கதைத்தனர். இவன் எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் நடந்தான்.

வீட்டு வாசலில் நுழைந்ததும் ரவியின் தாய் "இது யாருடா?....." "இல்ல அம்மா...எனக்கு படிப்பிச்ச மாஸ்டருடைய தங்கச்சி பஸ்சுக்கு நேரமாச்சி அதுதான் இஞ்ச நிப்பாட்டிட்டு விடிய அனுப்பவம் என்று கூட்டிவந்தனான்".

அதிகாலை நான்கு மணியாகியதும் புத்தகம் வாங்க வைத்திருந்த நூறு ரூபாய் பணத்தை கொடுத்து அனுப்பிவைத்தான். அவளும் போவதற்கு மனமில்லாமல் அரை மனதுடன் சென்றாள்.

பேரூந்தில் அனைவரும் இறங்கி விட்டார்கள். ரவி திகைத்து பழைய நினைவுகளில் இருந்து மீண்டு " அட கடவுளே வவுனியா வந்துவிட்டது" என்று புறுபுறுத்துக் கொண்டே தனது பையை தூக்கித் தோளில் மாட்டிக் கொண்டு இறங்குகின்றான். "இந்த சமுதாயத்திற்கு பயப்பிடாமல் அன்றைக்கு அவளுக்கு எதாவது என்னால் முடிந்த உதவியை செய்திருந்தால். அப்பா சொன்னது போல அவளுக்கு நல்ல இடத்தில் வேலை எடுத்துக் கொடுத்திருக்கலாம் சீ....சீ..... வீட்டுக்கு பொய் சொல்லிப் போட்டன்" என்று தனது மனதுக்குள் நொந்து கொண்டு வீட்டை நோக்கி நடக்கின்றான். இவன் மேல் ஆத்திரம் கொண்டது போல மழையோ பெரும் புயலாக கொட்டுகின்றது.

"......நான் கையில் அம்மாவின் தாலிக் கொடியுடன் அங்கு வந்த சனக் கூட்டத்தை நோக்கி வருகின்றேன் என்னைக் கண்டமக்கள்.........."

# இயற்கை தந்த பாடம்

அந்த அடர்ந்த காட்டுக்குள் நான் தொடர்ந்து நடக்கின்றேன். எனக்குப் பின்னால் யாரும் வருவதாக தெரியவில்லை எனக்கு பயமாக இருந்தாலும் நடந்து கொண்டேயிருக்கின்றேன். அடர்ந்த காட்டை விட்டு வெளி இடத்துக்கு வந்து விட்டேன். அந்த அடர்ந்த காட்டைவிட கேவலமாகக் கிடந்தது எனது கிராமம். உயிருடன் ஒரு மனிதரையுமே காணவில்லை. எங்கோ ஒரு மூலையில் இருந்த எனது ஜிம்மி மட்டும் என்னைக் கண்டதும் குரைக்கத் தொடங்கியது. நான் பயத்தில் எனது ஜிம்மியை என்னுடன் கூப்பிட்டு வைத்துக் கொண்டு நானும் ஜிம்மியுமாக அந்த இடத்தில் எனது உறவினர்களைத் தேடுகின்றேன். கால் இழந்ததும் கையிழந்ததும் அரைகுறையான உயிர்களுடன் கிடக்கின்ற மனிதர்களைக் கண்டதும் எனக்கு என்னை அறியாமலே அழுகை வருகின்றது. கடற்கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் தான் எனது வீடு இருந்தது. எனது வீட்டில் நானும் அப்பாவும் அம்மாவும் தங்கையும். பலியாய் போன உயிர்களைக் கண்டதும் எனக்குள் தத்துவங்கள் பிறக்கத் தொடங்கின. மனிதன் மதம், சாதி, மொழி என்று அடிபட்டு கடைசியில் செத்தே போகின்றான். இன்று இந்த இயற்கை மனிதனை இவ்வாறு பாகுபாடுபார்த்தா அழித்தது. ஏன் இந்த உலக மக்கள் இப்படி அடிபட்டு அநியாயமாக மாண்டு போறார்கள். இந்த இயற்கை தந்த பாடத்திலிருந்தாவது மனிதன் திருந்த மாட்டானா? வீட்டுச்சண்டை, காணிச்சண்டை, வீதிச்சண்டை, பதவிச்சண்டை என்று பல



சண்டைகளைப் பிடித்த எனது கிராமம் இன்று வேலியும் வீடுகளும் இல்லாமல் தரைமட்டமாக இருப்பதைக் கண்டதும் வேலி போட்ட வீடுகட்டிய மனிதர்கள் எல்லோரும் இப்போது எங்கே? சாதி பார்த்து ஒருவரின் வீட்டுக்குள் நுழையாத மனிதர்கள் இன்று தாழ்ந்த சாதி மனிதர்களுடன் இணைந்து இறந்து கிடக்கின்றார்கள். இப்போது எங்கே போனது இந்த சாதிச் சண்டைகள்?

எனது வீடு இருந்த அடையாளத்தையே காணவில்லை அந்த இடம் முழுவதுமாக நானும் ஜிம்மியும் நடக்கின்றோம். எனக்கு பசி வந்துவிட்டது. உணவு தேடி நடப்பதா? என்று எனக்கு புரியவில்லை. பசிக்களையையும் பார்க்காமல் தொடர்ந்து தேடுகின்றேன். இறுதியாக எனது அம்மாவின் தாலிக் கொடியை மட்டும் கண்டெடுத்தேன். எனது அப்பாவையும் தங்கையும் காணவேமுடியவில்லை.

வளர்ந்த தென்னை மரங்களையும் சவுக்கு மரங்களையும் வரிசை வரிசையாகக் கொண்டது எனது கிராமம். மீன் வாங்கவரும் வியாபாரிகள் எனது கிராமத்தின் அழகைக் கண்டதும் திகைத்துப்போய் நிற்பார்கள். பரந்த மணற்பரப்பைக் கொண்ட கடற்கரை ஓடி விளையாடுவதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும் உகந்த இடமாக இருந்தது. இன்று பிணங்கள் நிறைந்த சுடலையாகக் காட்சியளிக்கின்றது. மணற்காடாகிய எனது கிராமத்தை பார்ப்பதற்காக சுற்றுலாவாக வருபவர்கள் ஏராளமானவர்கள். இன்று சுனாமி வந்ததினால் மனிதர்களைப் பலி கொடுக்கும் இடமாகக் காட்சியளித்தது எனது உறவுகளை இழந்து இன்று தனிமையாக தவிக்கிறேன் சுனாமி தாக்கி அரைமணி நேரத்திற்கு பின்னர் பொது நிறுவனங்களும் மக்களும் எமது கிராமத்திற்கு வந்தனர். இவர்களைக் கண்டதும் எனக்கு ஓரளவுக்கு பயம் குறைந்தது. ஆனால், நான் கையில் அம்மாவின் தாலிக்கொடியுடன் அங்கு வந்த சனக்கூட்டத்தை நோக்கி வருகின்றேன். என்னைக் கண்ட மக்கள் தாலிக்கொடியை திருடிக் கொண்டு வருகின்றான் என்று எனது கையில் உள்ள தாலிக்கொடியைப் பறித்தெடுத்தார்கள். நான் அந்த இடத்தில் எதுவும் கதைக்க நினைக்கவில்லை. திருடன் பட்டத்துடன் எனது உறவினர்களைத் தேடுகின்றேன். இந்த மனிதர்களின் செயலைக் கண்டதும் மீண்டும் எனக்குள் தத்துவங்கள் பிறக்கின்றன. இயற்கை இப்படியான அழிவை ஏற்படுத்திக்கூட இந்த மக்கள் இன்னும் திருந்தவில்லை. முன்னைய காலத்தில் மனிதர்களின் மரணம் என்பது

மிகமிக குறைவாகவே இருந்தது. ஆனால் இன்று வாழ வேண்டிய இளைஞர்களும் யுவதிகளும் தங்களுக்குள் முரண்பாடுகளை உருவாக்கிக் கொண்டு மரணமாகிப் போகின்றார்கள். இதையெல்லாம் கண்ட இயற்கை பொறுக்க முடியாமல் பொங்கி எழுந்து விட்டது. இந்த பாடத்தினைக் கண்ட மனிதன் ஏன் மீண்டும் வன்முறையை நோக்கி போகின்றான்? இது எல்லாம் காலத்திற்கே வெளிச்சம்.

நானும் எனது காதலியும் கொஞ்சிகுலாவி விளையாடிய இடத்தைப் பார்த்தும் எனக்கு பழைய ஞாபகங்கள் மீண்டும் வந்தன. நானும் ரதியும் ஒருவரை ஒருவர் உயிருக்கு உயிராக விரும்பினோம். இருந்தும் ரதியின் தகப்பன் சாதியைக் காரணங்காட்டி எங்களது காதலைப் பிரித்துவிட்டார். அந்த சோகம் தாங்காமல் அவளும் தற்கொலை செய்து கொண்டாள். அவளும் நானும் அமர்ந்திருந்த சீமெந்து கட்டில் அமர்ந்தும் எனக்குள் தத்துவம் பிறக்கின்றது. பிரச்சினைகளைக் கண்டு மனிதன் தற்கொலை செய்து கொண்டால் அது பிரச்சினைகளுக்கு தீர்வாகுமா? கடவுளால் கொடுக்கப்பட்ட உயிரை நாமோ பிறரோ அழிக்க தகுதியில்லை. கடவுளால் கொடுக்கப்பட்ட உயிரை அவனே எடுத்துக் கொள்வான். ஆனால், இன்று அது உண்மையாகி விட்டது. கடவுளால் படைக்கப்பட்ட உயிர்களை அவனே கொண்டு சென்றுவிட்டான். இதைப் பார்த்து எனக்கு கோபம் வரவில்லை. மனிதன் இன்று செய்யும் அட்டூழியங்களினால் தான் இப்படியான சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் உண்டாகின்றது. ஏழைகளைச் சுரண்டி பணக்காரர்கள் சேர்த்த பணங்கள் எல்லாம் இப்போது எங்கே? அந்த மனிதர்கள் கூட உயிருடன் இல்லை. கடலின் கோபத்திற்கு பழியாகிவிட்டார்கள். முறையற்ற பாழியல் தொடர்புகள், முறையற்ற திருமணங்கள், சிறிய சிறிய சண்டைகளுக்காக மக்களை பழிவாங்கும் கொடூரகுணங்கள் கொண்ட மனிதர்கள். இந்த உலகத்தில் வாழ்கின்றார்கள். இதனால் தான் இயற்கை தனது பாடத்தை புகட்டியிருக்கின்றது. அப்படியிருந்தும் கூட இந்த மனித இனம் திருந்துவதாக இல்லை. நான் சிமெந்து கட்டில் இருந்தவாறு பின்பக்கமாகத் திரும்பிப்பார்க்கின்றேன். அங்குள்ள மனிதர்கள் அரை உயிருடன் கிடக்கும் ஜீவன்களை காப்பாற்றாமல் இறந்த மனிதர்களில் கிடக்கும் தாலி, காப்பு, சங்கிலி, மோதிரம் போன்றவற்றை கழற்றி தமது சட்டைப் பைகளில் போடுவதைக் கண்டதும் இந்த மனிதர்கள் திருந்தவே மாட்டார்கள் என்ற சிந்தனையுடன் அந்த இடத்தில் இருந்து எழுந்து தொடர்ந்து

நடக்கின்றேன். பின்னால் திரும்பி பார்க்கின்றேன் எனது ஜிம்மியைக் காணவில்லை. நாயால் பசியைத் தாங்க முடியாமல் எங்கோ ஓர் இடத்தில் படுத்துவிட்டது என்று நினைத்துக் கொண்டு நடக்கின்றேன். எப்படியோ எனது வீடு இருந்த இடத்தை கண்டுபிடித்துவிட்டேன். வீட்டில் சுனாமி வருவதற்கு முன்னர் நடந்த சம்பவம் என்னை முள்ளாக குத்தியது.

எனது அப்பா என்னை பார்த்து "தம்பி என்ர மகள் A/L சித்தியடைந்து விட்டாள். இன்றைக்கு கடைக்குச் சென்று தங்கச்சி பல்கலைக்கழகத்தில் படிக்க தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு வா என்ர ரங்கு பெட்டியில மீன் வித்து சேர்த்த பணம் ஐந்தாயிரம் ரூபாய் இருக்கு எடுத்துக் கொண்டு போ..." பணம் என்றதும் எனது சேட்ப் பொக்கட்டைத் தட்டிப்பார்த்தேன் பணத்தைக் காணவில்லை. எனது தங்கை பரீட்சையில் சித்தியடைந்ததும் எனக்கு சந்தோஷம். "அம்மா கடைக்குப் போய்ட்டு கெதிய வருவன் பகலுக்கு மீன் பொரித்து வைங்க" என்றவாறு கடையை நோக்கிப் புறப்பட்டேன். வீட்டில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரந்தான் வந்திருப்பேன் நான் வந்த இடம் காட்டுப் பகுதி "சோ....சோ..." என்று எனக்குப் பின்னால் இரைச்சல் சத்தம் கேட்டதும் பின்னால் திரும்பிப் பார்த்தேன். எனது கிராமத்திற்கு மேலாக மூன்று பனை உயரத்தில் நீர் வந்தது. இவ்வளவு தான் எனக்குத் தெரியும். நான் கண் விழித்துப் பார்க்கின்றேன்.அடர்ந்த அந்த சவுக்குக் காட்டின் நடுப்பகுதியில் கிடந்தேன். பின்னர் தான் எழுந்து எனது கிராமத்தை நோக்கிப் புறப்பட்டேன்.

அழகாக இருந்த வீடு இன்று அலங்கோலமாகக் கிடந்தது. அடையாளம் தெரியாத இரண்டு குழந்தைகளின் பிணங்கள் கிடந்தன. எனது வீடு இருந்த இடத்தில் குழந்தைகளின் பிணங்களைக் கண்டதும் எனக்குள் தத்துவங்கள் பிறக்கின்றன. கடவுளும் குழந்தையும் ஒன்று என்று கூறுவார்கள். ஆனால், இன்று இந்த குழந்தைகள் இறந்து போனதற்கு என்ன காரணம்? இவர்கள் இந்த சமூகத்திற்கு என்ன கொடுமை செய்தார்கள்? சில வேளைகளில் இவர்கள் அநியாயக் காரர்களுக்கு குழந்தையாகப் பிறந்த குற்றத்திற்காக பழி வாங்கப்பட்டார்களோ. இவர்கள் வளர்ந்து இந்த உலகத்தில் அநியாயங்களைச் செய்யப் போறார்கள் என்று எண்ணி இறைவன் பழியெடுத்துவிட்டான் போல தெரிகின்றது. எனக்குள் நானே நொந்து கொண்டு இந்த இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்

காரணம் "மனிதன் இன்று உலகத்தில் செய்யும் அட்டூழியங்கள்" தானே. இப்படியாக இந்த மனிதர்களின் கொடுமைகளும் அட்டூழியங்களும் தொடர்ந்தால் எதிர்காலத்தில் இந்த உலகமே இயற்கைக்கு அழிந்து போகும். இனிமேலும் மனிதன் உணர்ந்து திருந்தாவிட்டால் இதனை யாராலும் தடுக்க முடியாது.

எனது உறவினர்களைத் தேடிகளைத்துப் போனேன். என்னால் அவர்களை உயிருடன் காணமுடியவில்லை. சரி அவர்களது உயிரற்ற உடலையாவது பார்ப்போம் என்று தேடுகின்றேன். அதுவும் கிடைக்கவில்லை. ஒரு சொந்தங்கூட இல்லாமல் தனிமையில் தவித்துக் கொண்டிருந்த நான் என்ன செய்வதென்று தெரியாமல் அந்த பரந்த கடற்கரை மணலில் எனது பாதங்களைப் பதித்தவாறு எனது வாழ்க்கைக்கு கேள்விக்குறியைப் போட்டுக் கொண்டு தொடர்ந்து நடக்கின்றேன்.



"............ தம்பி இரவு பத்து மணிக்கு பத்து பேர் இருக்கும் கறுப்புடையைப் போட்டுக் கொண்டு வந்து என்ர புருஷன வாளால வெட்டிப் போட்டாங்கள்......."

# காகங்களும் மைனாக்களும்

தனது தந்தை அழகாக வளர்த்து வைத்த வாழைத்தோட்டத்தில் பாலைவனத்தில் விடப்பட்ட ஆட்டக்குட்டியைப்போல நடக்கின்றான். அப்போது அவனது கால்களில் வெள்ளை பிரம்பு தட்டுப்படுகின்றது. இதனால் சுரேஷ் தன்னை அறியாமலே கதைக்கின்றான்.



"பத்து நாளைக்க முன்னம் வந்திருந்தா இவங்களோட நானும் செத்துப்போயிருப்பேன். ஏன் கடவுளே என்னை மட்டும் இப்படிச் சோதிக்கிற? நானும் மனிதன் தானே. ஏன் இவர்களுக்கு இப்படி நடந்தது? இதைக்கேட்க யாரும் இல்லையா...?" என்றவாறு அந்த வாழைத்தோட்டத்தில் பித்துப் பிடித்தவனைப் போல தனது தங்கையின் வெள்ளைபிரம்பை கைகளில் எடுத்தவாறு கண்களை மூடிக்கொண்டு நடக்க ஆரம்பிக்கின்ற போது பழைய ஞாபகங்கள் அவனைச் சுற்றி வருகின்றன.

" என்ன கந்தசாமியண்ணை இன்றைக்கு நேரம் பிந்தி வாறீங்கள் முதலில எடுத்தனான். இன்னும் வரவில்லையினு சொன்னாங்க வாற வழியில ஏதும் பிரச்சினையா.....?"

" ஓமடா தம்பி நெல்லியடியில இருந்து யாழ்ப்பாணம் வாறதென்றால் உயிர் போயிட்டு வந்திடுமடா. அதுவும் மோட்டார் சைக்கிளில வாரதுன சரி மனிஷன் செத்தான்"

"என்ன கந்தசாமியண்ணன் அப்படி பிரச்சினை?"

" சுரேஸ் இந்த சமாதான ஒப்பந்தம் வந்து கொஞ்ச காலமாக நாட்டில அமைதியிருந்திச்சு. இப்ப எங்கோ ஒரு நாடான ஜெனிவாவில பேச்சு நடந்திச்சு. அதில முடிவெடுத்த சில வாக்குறுதிகளை செயற்படுத்தத் தவறிவிட்டதினால தான் எங்கட நாட்டில இப்படிப் பிரச்சினை....."

"நானும் பேப்பரில பார்க்கிறனான் யாழ்ப்பாணத்தில அமைதியில்லையாம் என்று அடிக்கடி செய்தி வருகுது. நாங்கள் முதல் யாழ்ப்பாணம் வரும் போது அங்க அமைதி இருந்தது தான். அதுக்கிடையில அப்படி என்ன நடந்திச்சு?"

" சுரேஷ் அது அப்ப இது இப்ப பால்குடி மறவாத பிள்ளைகளுடன் சேர்த்து தாய், தந்தை என்று எங்கட தமிழ் இனத்தைக் கொன்று குவிக்கிறாங்கடா... சண்ட காலத்திலக் கூட இப்படி தமிழ் மக்கள் சாகவில்லை. இப்ப கொஞ்ச நாள தமிழ் இனத்தை அழிக்கிறாங்க. அது எங்க போய் முடியுதோ தெரியாது."

" மற்றது மணியண்ணன் உவன் சுகந்தன் இஞ்ச வாறனு சொன்னான். எப்படி அவன்ட பயண அலுவலெல்லாம் சரி வந்திட்டா......?"

"அட உனக்கு அந்த விஷயம் தெரியாதா?"

" என்ன விஷயம்?"

" பாவமடா அவன். நெல்லியடியில் கிரனேட் வெடிச்சிச்சு அண்டைக்கு இவன் அவங்கட அம்மாவுக்கு மருந்து வாங்க பாமசிக்கு போகேக்க அவன் காற்சட்டை பொக்கற்றுக்குள மருந்து போத்தல் வைத்திருந்தான் இதைக் குண்டு என்று நினைத்து அவனைச் சுட்டுப் போட்டாங்கள் ஆமிக்காரர். பார் அவண்ட வாழ்க்கை அப்படியாக போச்சு. அடுத்த மாதந்தாண்டா அவனுக்கு கலியாணம் என்று கதைச்சாங்க....."

"சீ.....சீ.....பாவம் சரி மணியண்ணன் நான் நாளைக்கு காசு போடுறன். அப்பாவையும், அம்மாவையும் தங்கச்சியையும் கவனமாக பாத்துக்கங்க."

" இஞ்ச சுரேஷ் உவள் வாணிக்கு ஒரு சம்மந்தம் வந்திருக்கு. பொடியன் O/L வரை படிச்சிட்டு கதிரை பின்னல் வேலை செய்கிறான். ஆனா வாய்பேச மாட்டான்"

"என்ன மணியண்ணன்?"

"வேறு என்னடா செய்றது குறையில்லாத மாப்பிளையை எப்படி அவளுக்குத் தேடுறது. வாறவங்க எல்லாம் அவளின்ட குறையைக் கண்டதும் வேண்டாம் என்று போறாங்க."

"சரி பொருத்தமாக இருந்தா பாருங்க. எனக்கு இன்னும் பத்து நாளில விசா முடியுது. எப்படியும் நான் சிறிலங்காவுக்கு வந்திடுவன்"

"ஏய் சுரேஷ் உன்ர அப்பா சொன்னாரு வரேக்க ஏதோ வெளிநாட்டு சாராயம் போன முறை வரேக்க கொண்டுவந்தாயாம் அதுவொன்று கொண்டு வரச் சொன்னார்"

"சரி நான் கொண்டு வாறன்"

" சுரேஷ் வேற என்ன?"

" ஒன்றுமில்லை மணியண்ணன் எல்லாம் நான் வந்து கதைப்பம்"

" சரி சுரேஷ்"

அன்றுதான் சுரேஷும் மணியண்ணனும் தொலைபேசியில் உரையாடிய இறுதிநாள்.

சுரேஷின் பெற்றோருக்கு பாரிச வாதம் வந்து நடக்க முடியாது. வாணி பிறவியிலேயே இரண்டு கண்பார்வையையும் இழந்தவள். பக்கத்து வீட்டு மணியண்ணன் தான் இவர்களது குடும்பத்துக்க உதவி செய்து வருகின்றார். சுரேஷ் லண்டனுக்குச் சென்று பத்து வருடங்கள். மணியண்ணனே அந்தக் குடும்பத்துக்கு உதவியாக இருந்தார்.

மணியண்ணனுடன் தொலைபேசியில் கதைத்துவிட்டு சென்ற சுரேஷுக்கு பின்னர் டெலிபோன் எடுக்கக்கூட எவரும் இல்லை. சுரேஷின் தொலைபேசி இலக்கம் மணியண்ணனை விட யாருக்கும் தெரியாது. டெலிபோன் எடுக்க அவரும் உயிருடன் இல்லை.

பத்து நாட்கள் கழிந்து லண்டனில் இருந்து நெல்லியடியில் வந்திறங்கினான் சுரேஷ். வீட்டின் படலை பூட்டிக் கிடக்கின்றது. இவன் லண்டனுக்குப் போகும் போது; சிறிய குட்டியாக இருந்த றோசி. இரண்டு குட்டிகளுக்குத் தாயாக அவனுக்க முன் வந்துநின்று வாலை ஆட்டியது.

சுரேஷைக் கண்டதும் பக்கத்து வீட்ட ராசாத்தியக்கா ஓடிவந்து "தம்பி சுரேஷ் உங்கட தங்கச்சி, அம்மா, அப்பா, மணியண்ண எல்லோரையும் கதவைத்தட்டிக் கொலை செய்து போட்டாங்கள். எங்கட வீட்டையும் என்ர மனஷனக் கொலை செய்து போட்டாங்கள்."

இராசாத்தி அக்கா படலையைத் திறந்து விட்டதும் சுரேஷ் வாங்கி வந்த பொருட்களை வீதியில் போட்டு விட்டு வீட்டைத் திறந்து வீட்டின் சுவர்களில் மாட்டப் பட்டிருந்த அவர்களின் படங்களைப் பார்க்கின்றான்.

ஊர் மக்கள் எல்லோரும் சேர்ந்து இறந்து போன எட்டுப் பேரினதும் சடலங்களை அடக்கம் செய்து விட்டனர். இதனால், சுரேஷ் இறந்து போனவர்களின் உடல்களைக் கூட பார்க்கவில்லை.

தனியாகத் திரிந்தும் உணவின்றியும் ஒரு மாதத்திற்கு மேல் கழிந்தது. பக்கத்து வீட்டு ராசாத்தி அக்க உணவு கொண்டு வந்து வைத்து விட்டுச் செல்வாள். அதையெல்லாம் றோசியே தின்றது.

ராசாத்தி அக்கா சுரேஷின் வீட்டுப்படலையை திறந்தவாறு "சுரேஷ்... தம்பி... சுரேஷ்" என கூப்பிட்டக்கொண்டே வருகின்றான்.

ராசாத்தி அக்காவின் குரலைக் கேட்டதும் கண்களைத் திறந்து பார்க்கின்றான். அவனுக்கு எதிரே

இரண்டு காகங்கள் மைனாக்குஞ்சொன்றை துரத்திக் கொத்தக்கொண்டிருந்தன. அந்தக் குஞ்சு என்ன செய்வதுஎன்று

தெரியாமல் வாழைச்சருகுக்குள் அங்கும் இங்கும் ஓடி ஒளித்தது. ஆனால், அந்த இரண்டு காகங்களும் விடுவதாக இல்லை. அந்தக் குஞ்சை கொத்திக் கொத்தி காயத்தை ஏற்படுத்தி அரை உயிருடன் இருக்கும் போதே இறைச்சியைச் சுவைக்க முற்பட்டன. வலி தாங்க முடியாமல் "மை...ன....மை...னா...மை....." என்று அலறியது. இதைக் கேட்டதும் ஏனைய மைனாக் கூட்டங்கள் கூட்டம் கூட்டமாக படையெடுத்து வருவது போல அந்த வாழைத் தோட்டத்தை நோக்கி பறந்து வந்து அந்த இரண்டு காகங்களையும் விரட்டி விரட்டி கொத்தின. தலையில் சிறிய காயம் பட்ட அந்த மைனாக் குஞ்சை அனைத்து மைனாக்களும் பாதுகாப்பாக அழைத்துச் சென்றன.

தோல்வியடைந்த இரண்டு காகங்களும் ஏமாற்றத்துடன் உயரப்பறந்து சென்று மறைந்தன. கையில் வெள்ளை பிரம்புடன் சுரேஷ் பச்சைப் பசேலென்று இருந்த வாழை இலைகளை இனிமேல் இந்தத் தோட்டத்திற்கு வரமாட்டேன் என்ற எண்ணத்துடன் அந்தப் பிரம்பால் தட்டுகின்றான்.

உணவு கொண்டு வந்த ராசாத்திஅக்கா உணவை சுரேஷின் அறைக்குள் வைத்துவிட்டு வாழைத்தோட்டத்தை நோக்கி வருகின்றாள். சுரேஷைக் கண்டதும்
"இதுவென்ன தம்பி தங்கச்சின்ட வெள்ளைபிரம்புடன் நிக்கிறீங்க."

"இல்ல அக்கா தங்கச்சியை மறக்க முடியவில்லை"

"சரி வாங்க சாப்பிடுங்க இப்படி எத்தனை நாளைக்குத் தான் சாப்பாடு இல்லாம இருக்கப் போறீங்க?"
ஒரு மாதத்திற்குப் பின்பு சுரேஷ் அன்றுதான் மனம் திறந்து கதைத்தான்.

"சாப்பாடு கிடக்கட்டும் ராசாத்தி அக்கா என்ன நடந்திச்சு. ஏன் இப்படி எல்லோரும் ஒரேடியா செத்தாங்க?"

" தம்பி இரவு பத்து மணிக்கு பத்து பேர் இருக்கும் கறுப்புடையைப் போட்டுக்கொண்டு வந்து என்ர புருஷன வாளால வெட்டிப் போட்டாங்கள். பிறகு உங்கட வீட்டுப் பக்கம் போனாங்கள். ஏதோ ஐயோ...! என்று உங்கட தங்கச்சி கத்தின சத்தம் மட்டுந்தான் கேட்டது. நா யன்னலால வெளியில ஓடினதால என்னை உயிரா

விட்டுட்டு போட்டாங்க. ஊர் மக்கள் இரவு சத்தம் கேட்டதும் ஒருதரும் வெளியில் வரவில்லை. எங்கட ஊரில ஆயிரம் பேருக்கு மேலாக இருக்காங்க. அத்தனை பேரும் வந்திருந்தா அந்த பத்துப் பேரையும் அடிச்சி கலைச்சிருக்கலாம். ஆனா என்ன செய்வது...? எங்கட ஊர் ஒற்றுமையில்லை".

அந்த நேரத்தில் மீண்டும் அந்த மைனாக்குஞ்சை இரண்டு காகங்கள் துரத்தித் துரத்திக் கொத்திக் கொண்டிருந்தன. மைனாக் கூட்டங்கள் ஒரு வெட்டுக் கிளிக்காக வேண்டி தமக்குள் முரண்பட்டுக் கொண்டது. இதனால் சண்டைஏற்பட்டு மைனாக்கள் பிரிந்து தனித்தனியாகச் சென்றன.. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த காகங்கள் அந்த மைனாக் குஞ்சை வேகமாகத் துரத்திக் கொத்தத் தொடங்கின. தாய் மைனா தனிமையாக நின்று சிறிது நேரம் தடுத்துப் பார்த்தது. அதனால் முடியவில்லை.

இறுதியில் அந்த மைனாக் குஞ்சியை இரண்டு காகங்களும் சேர்ந்து உண்டன. வெறும் சோகத்துடன் தாய் மைனா திரும்பிப் பார்த்துச் சென்றது.

"அங்க பார்த்தீங்களா ராசாத்தி அக்கா இதே சம்பவம் இதற்கு முன் தலை கீழ நடந்தது"

"சரி சுரேஷ் வா இண்டைக்கு ஒரு மாதத்துக்கு மேலே சோறு சாப்பிட்டு தண்ணிய மட்டும் குடிச்சுக்கிட்டு எத்தன நாளைக்குத் தான் இந்த வாழைத் தோட்டத்தில இருக்கப் போற வா சாப்பிடுவம்"


"என்னன்று அக்கா சாப்பிடிறது"

" வா.....வா.....சாப்பிட்டிட்டு யோசிப்பம்...." என்று ராசாத்தி அக்கா கூறியதும் சுரேஷ் ஒரு முடிவுக்கு வந்தவனைப்போல அன்று ராசாத்தி அக்கா சமைத்த சோற்றையும், கணவாய் கறியையும் ராசாத்தி அக்காவுடன் சேர்ந்து சாப்பிட்டான்.

இரவு சாப்பாட்டுடன் ராசாத்தி அக்கா சுரேஷின் அறைக்குள் செல்கின்றாள். அங்குசுரேஷைக்காணவில்லை. வெள்ளைபிரம்பின் கீழ் ஒரு கடிதம் மேசையில் கிடந்தது. அதை பிரித்துப் பார்க்கின்றாள். "என்னை யாரும் தேட வேண்டாம். எனது சொத்துக்களை எல்லாம் அநாதைகளுக்கு கொடுங்கள். ராசாத்தி அக்கா நான் உயிரா இருந்தா எப்பவோ ஒரு நாள் உங்களைத் தேடி வருவேன்!" இராசாத்தி அக்காவிற்கு கண்ணீர்த்துளிகள் ஆறாகப் பெருகின. படலையைப் பூட்டிவிட்டு வீதியில் வந்து நின்று கொண்டு வானத்தைப் பார்க்கின்றாள். அவளைப் பார்த்து ஒரு நட்சத்திரம் கண்சிமிட்டுகின்றது.

**இந்த உலகத்தில் உண்மைக்காதல் என்று எதுவுமில்லை பெரிய டொக்டரின் மனைவி வீட்டு வேலைக்காரருடனுன் ஓடுகின்றாள். பல வருடங்கள் காதலித்து திருமணம் செய்து திருமணம் செய்த இருபத்தைந்து வயதுப் பெண்ஐம்பது வயதுக் கிழவனுடன்ஓடுகின்றாள்.**

# பகிடியால் வந்த வினை



“வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமல்ல இன்று உங்கள் கைகளில் இருப்பது நாளை இன்னொருவரது கைக்குப் போகலாம். இதைநீங்கள் நன்கு உணர்ந்து நடக்க வேண்டும்” என்று வழமைக்கு மாறாக தனது நண்பியுடன் தத்துவம் பேசினான் ரவி.

“ஹலோ... ஹலோ... ரவி நிற்கிறாரா?” எதிர்முறையில் “இல்லை அவர் றோட்டு நீட்டுக்கு ஓடுகிறார் ஏதோ பைத்தியம் பிடிச்சிடுச்சோ தெரியல்ல” கவிதாவும் “எனக்கும் சந்தேகமாகத்தான் இருக்க அவர் என்னுடன் முதல் கதைக்கும் போது வழமைக்கு மாறாகத்தான் கதைத்தார்” “தங்கச்சி வந்ததோன நான் சொல்கிறன்” என்றார். வயதான அந்த ஐயா

“என்ன நடந்தது இவருக்க இவ்வளவு காலமும் நல்லாத்தானே இருந்தார் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்? அட கடவுளே பாவம்” சிந்தித்தவாறு மீண்டும் தொலைபேசியின் மூலம் அழைப்பை ஏற்படுத்துகிறான். “ஹலோ... ஹலோ...” மீண்டும் வயதான ஐயா “ தங்கச்சி அவர் றோட்டில சும்மா ஓடி கைகால்கள் எல்லாம் காயம்.

இப்பத்தான் யாரோ ஒரு பெடியன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோறான்" என்றார்.

"அம்மா ரவி நிற்கிறாரா? இப்ப ஒரு ஐயா தொலைபேசியைத்தந்துவிட்டு அவன் றோட்டு நீட்டுக்கு ஓடுகிறான் என்று சொல்லிவிட்டுப் போயிட்டார்"

"முந்தி நான் சொல்லுறது எல்லாம் கேட்பார். இப்ப கொஞ்நாளா சொல்லுறது ஒன்றும் கேட்கிறது இல்லை. முதல் கதைக்கும் போதும் தத்துவவாதியாகத்தான் கதைத்தார். யாரும் செய்வினை செய்து போட்டாங்களோ தெரியாது.

அவனுக்கு ஏதோ கொள்கையை வகுத்துக்கொண்டு அதன் படிதான் வாழ்வேனென்று வாழ்கிறார். பூந்தோட்ட அகதிமுகாமை எப்போது முற்றாக அகற்றுகிறாங்களோ? அப்பதான் அதைவிட்டு வெளியேறுவேன்.

என்று கூறி முதலில் காதலித்த பெண்ணான உமாவையும் சண்டை போட்டுக்கலைச்சுவிட்டார். இதை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டு அவளும் ஆடம்பரமான கட்டுடல் கொண்ட ஆடவருடன் தகாதவழியில் ஈடுபடத்ட தொடங்கினாள். இதனால் தானே அவருக்கு பைத்தியம் எதுவும் பிடிச்சிச்சோ தெரியாது?" ரவி கூறியதை அவனின் அம்மாவிடம் கூறிக் கொண்டே அழத் தொடங்கினாள்.

எதிர் முனையில் ரவியின் அம்மா "இப்ப கொஞ்சநாளா நானும் பாக்கிரன் எல்லாத்தையும் எடுத்தெறிஞ்சு கதைக்கிறான் நானும் அவனுக்குச் சொல்லிப்பார்த்தாச்சு அவன் திருந்திர மாதிரி இல்ல சரி நான் அவன் வந்தோன எடுக்கிறன் ஓகே"

இந்த உலகத்தில் உண்மைக்காதல் என்று எதுவும் இல்லை. பெரிய டொக்டரின் மனைவி வீட்டு வேலைக்காரனுடன் ஓடுகின்றாள். பல வருடங்கள் காதலித்து திருமணம் செய்துவிட்டு இருபத்தைந்து வயது பெண் ஐம்பது வயது கிழவனுடன் ஓடுகின்றாள். இதை எல்லாம் நினைத்து வாலிபர்கள் மதுவுக்கு அடிமையாகி தமது வாழ்க்கையை நாசமாக்குகிறார்கள்.

தலைவிரித்தாடும் இந்த உலகத்தில் பெண்களுக்குத் தேவை பணமும் தங்கட காமத்தை அடக்கக்கூடிய வாலிபனம்தான், தவிர அன்பு, பாசம் என்று எதுவும் இல்லை. நான் உனக்கு சொல்லித் தெரிய வேண்டிய இல்லை. நானும் காதலித்தனான் என்ரை கொள்ளைக்கு ஒத்துவரவில்லை. அவள் என்னை நாயிலும் கேவலமாக பார்த்தாள். அவளுடன் உள்ள தொடர்பை முற்றுமாக தவிர்த்துக்கொண்டேன்.

இதை நீங்க எனக்கு தோல்வி என்று எடுக்கக்கூடாது இது என்னைப் பொருத்தவரையில் வெற்றிதான் ஏனென்றால், நான் அவளின் சிந்தனையாகவே இருந்திருந்தாள். இன்று உங்களைப் போன்ற ஒரு நல்ல பெண்ணை சந்தித்திருக்க முடியாது. நீங்கள் உங்களை காதலிக்கச் சொல்லிக் கேட்டபோது நான் ஏன் தெரியுமா? மாட்டன் என்று சொன்னனான். எனது மனசாட்சியின் படி முக்கால் தோற்றத்துடன் எத்தனையோ இரவுகள் நானும் உமாவும் சந்தித்திருப்போம். பெண்பாவம் பொல்லாதபாவம் என்றதற்காக வேண்டித்தான் இவ்வளவு காலம் பொறுத்தேன்.

என்னைப் பொருத்தவரையில் காதலிக்கவேண்டும் என்பது எனது இலட்சியம் இல்லை காதலிக்காக வேண்டி பைத்தியமாக அலைய வேண்டும் என்ற எண்ணமும் எனக்கு இல்லை. எங்கள் மீது விருப்பம் இல்லாதபொருள் மீது நாம் ஏன் விருப்பம் வைக்க வேண்டும்? எங்கோ ஓர் இடத்தில் என்மீது விருப்பம் வைக்கும் பெண் பிறந்திருப்பாள்

“அட இயேசுவே இப்படியெல்லாம் என்னுடன் கதைக்க ரவியா இப்படி றோட்டில ஓடுகின்றார். உண்மையாகவே பைத்தியம் பிடிச்சிருச்சோ” என சிந்தித்தவாறு இருந்தார்.

திடீரென்று யோசித்த கவிதா ரவியின் தம்பிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துகின்றாள். “நான் கொழும்பில இருக்கிறன் அண்ணா வவுனியாவில் வீட்டில் இருக்கிறார்” என் கூறி தொலைபேசியை வைத்துவிட்டான். யாழ்ப்பாணத்தில் உள்ள கவிதா

ரவி வைத்தியசாலையில் உள்ளார் என்பதை கூறமுடியாமல் மெதுவாக வீட்டை நோக்கி நகர்ந்து கனது படுக்கையறையில் படுத்துக்கொண்டாள்.

சில மணிநேரங்களுக:கு பின்னர் "ஹலோ... ஹலோ... நான் ரவி கதைக்கிறன் எப்படி சுகமாக இருக்கிறீர்களா? எப்படி யதார்த்தமாக எல்லாத்டதையும் நடிக்க வைத்து சிறுகதையொன்று தயாரித்து பார்த்தன்? நல்லாயிருக்கா என்மீது நீங்க உண்மையாகவே பாசம் வைத்திருக்கீங்க எல்லாத்தையும் அம்மாவின் மூலம் தம்பியின் மூலமும் தெரிந்து கொண்டன் நீங்க முதல் கேட்டமாதிரி நான் உங்கள் கலியாணம் செய்கின்றன். ஹலோ... ஹலோ... என்ன சத்தத்தைக் காணவில்லை."

எதிர்முனையில் "தம்பி நீங்க யார் கதைக்கிறது? என்ரை மகள் கவிதா ஹாட்அட்டக்கால் இறந்து போயிரிச்சு ஐ... யோ...ஐயோ... என்றபிள்ளை"

பைத்தியமாக நடித்த ரவி இன்று உண்மையாகவே பைத்தியம் பிடிச்சு வானத்தில் இருக்கும் எட்டாத நிலாவை பாய்ந்து பிடிப்பவன் போல கைநழுவிப் போன கவிதாவைத்தேடி வீதியில் ஓட ஆரம்பித்தான்.



**"..........உங்கள் குடும்பம் உறவுகள் என்றிருக்காமல் எமது தமிழ்ச் சமூகம் பற்றி சிந்தியுங்கள். ஒவ்வொரு தமிழ் குடிமகனுக்கும் இந்த மண்ணை.........."**

# துரோகம்

"அம்மா எனக்க இண்டைக்கு முதல் பரிசு கிடைச்சிச்சு. என்றவாறு சாப்பிடுவதற்கு ஆயுத்தமாகின்றான். சோறு ஒரு பிடிகூட எடுத்து



வைக்கவில்லை. அவனது வீட்டுக்குள் புகுந்த சில மனிதர்கள் அவனைக் கைது செய்தனர். கண்களைக் கட்டியதும் அந்தநாளில் பாடசாலையிலும் வீதியிலும் நடந்த சம்பவங்கள் அவனைச் சுற்றி வட்டமடிக்கின்றன.

"......சமாதான ஒப்பந்தம் வந்து பல வருடங்களாகிவிட்டன. நாட்டில் அமைதி நிலவுவதாகத் தெரியவில்லை எங்கு பார்த்தாலும் களவு, கொள்ளை, கொலை, கற்பழிப்பு இதையெல்லாம் ஒழிப்பதாக இருந்தால் தமிழ் இளைஞர்களாகிய நீங்கள் ஒன்றுபட வேண்டும் சிந்தனையில்லாமல். இளைஞர்களாகிய நீங்கள் வீண் பொழுது போக்கிக் கொண்டு திரிந்தால், எங்கள் தமிழ்மொழியும் தமிழ் மண்ணும் எதிர்காலத்தில் அழிவடைந்துவிடும். சற்று சிந்தித்துப் பாருங்கள். இலங்கையில் அரசகரும மொழியாக சிங்கள மொழி உள்ளது. உயர் பதவிக்காண விண்ணப்பப் படிவங்கள் தமிழில் நிரப்பிக் கொடுக்க முடியுமா? ஆனால், ஆங்கிலத்தில் நிரப்பிக் கொடுக்கும் அதே வேளை சிங்களத்திலும் செல்லுபடியாகின்றது. ஏன் இந்த தமிழ் மொழியையும் அப்படி செய்தால் என்ன? எமது நாட்டில் பெரும்பாலும் இரண்டு மொழி பேசக் கூடியவர்கள்தான் அதிகம் ஏன் தமிழை மட்டும் புறக்கணிக்க வேண்டும். இளைஞர், யுவதிகளே ஒன்று பட்டு உங்களுக்குள் வேற்றுமைகளைக் களைந்து

எமது மொழியையும் மண்ணையும் காப்பற்றுங்கள்....!" அன்று தொடங்கி எத்தனை தமிழ் உயிர்கள் இலங்கையில் கொல்லப்பட்டு விட்டன. அதனால், எமக்கு நிம்மதி கிடைத்ததா? நமக்குள் ஒற்றுமையில்லாமல் பணத்துக்கும் பதவிக்கும் வேண்டி உங்கள் மானத்தை அடகுவைத்து வாழ்கின்றீர்கள். ஏன் இப்படியான நிலை எமது மண்ணுக்கு வந்தது. தமிழர்களாகிய நாங்கள் ஒற்றுமையில்லாமல் வாழ்வதேயாகும். பிறந்து உலகமே அறியாத பிஞ்சுப் பாலகர்கள் கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றனர். ஏன் இன்னும் தமிழ்ச் சமூகமே உனக்கு உணர்வு வரவில்லை. எமது ஈழ மண் எதற்கு குறை பயந்து வெளிநாட்டுக்குப் போறார்கள். சிலர் அங்கிருந்து கொண்டு விதண்டா வாதம் கதைக்கிறார்கள். சில கவிஞர்களும் எழுத்தாளர்களும் யதார்த்தத்திற்குப் பொருந்தாத ஆக்கங்களை எழுதிக் கொண்டு தாங்களும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதாக கூறிக் கொண்டு தற் பெருமை கொள்கின்றார்கள். எல்லோரும் அப்படி இல்லையென்றாலும் சிலர் இருக்கத் தான் செய்கிறார்கள். ஒற்றுமையில்லாமல் எல்லோரும் இப்படியாகப் போனால் எமது தமிழ்ச் சமூகமே அழிவடைந்து போகும். எத்தனை நாட்களுக்குத் தான் பயந்து வாழ்வது. இப்படியே பயந்து வாழ்ந்தால் எமது தேசத்தில் கடைசியில் மிஞ்சுவது மண் மட்டுந்தான்.

உங்கள் குடும்பம் உறவுகள் என்றிருக்காமல் எமது தமிழ்ச் சமூகம் பற்றி சிந்தியுங்கள். ஒவ்வொரு தமிழ் குடிமகனுக்கும் இந்த மண்ணைக் காப்பாற்றுவதற்கு ஏதோவொரு பங்கு உண்டு. எமக்கு சோறு கிடைத்தால் போதும் இராமன் ஆண்டாள் என்ன? இராவணன் ஆண்டாள் என்ன? என்று வாழ்விங்களாக இருந்தால் எமது தமிழ் மொழியே அழிவடைந்து போகும். அனைவரும் ஒன்றுபடுங்கள் கட்டாயம் எமக்கு விடுதலை கிடைக்கும். முன்னர் பெரியார்கள் செய்த தவறை மீண்டும் வரலாற்றில் செயடது இனிவரும் தமிழ்ச் சந்ததியை படுகுழியில் தள்ள வேண்டாம். இனிமேல் வரும் தமிழ்ச் சமூகமாவது நிம்மதியாக வாழட்டும். அது இங்குள்ள ஒவ்வொருவரினதும் கடமை. இதை மறந்து உங்கள் மனங்கள் போன போக்கில் போக வேண்டாம். உலகத்தில் முடியாது என்று எதுவும் இல்லை. நாங்கள் எங்களது உரிமையைப் பெறுவோம். மக்களாகிய நாங்கள் சற்று சிந்தித்துப் பார்ப்போமாயின் தமிழர்கள் தொடக்கத்தில் எத்தனை உயர் பதவிகளில் இருந்தார்கள் இன்று அதன் நிலை என்ன? எப்படியான புத்திஜீவிகள் எமது மண்ணில் இருந்தார்கள் அவர்கள் எல்லோரும் எங்கே? பயந்து வெளிநாட்டுக்கு

ஓடிவிட்டார்கள். அவர்கள் அங்கு சென்று திருமணம் முடித்து குழந்தை குட்டிகளைப் பெத்துக் கொள்கிறார்கள். கடைசியில் அவர்கள் தமிழே தெரியாமல் ஆங்கில மொழியில் படித்து இங்கு வரும் போது ஏதோ சுற்றுலாவந்து பார்த்து விட்டுப் போவது போலவும் அந்நிய தேசத்திற்கு வருவது போலவும் வந்து செல்கின்றார்கள். அதுவும் அவர்களுக்கு இங்கே இருக்க முடியாதாம் வெயிலாம். இப்படியே போனால் எங்கள் மொழி எப்படி காப்பாற்றப்படும்?....''என்று மதன் தமிழ்த்தினப் போட்டிக்கு மண்ணும் மொழியும் என்ற தலைப்பின் கீழ் பேசி முதல் பரிசினைப் பெற்றான். மதன் பேசி முடிந்ததும் பாடசாலையில் ஒரே ஆரவாரம். அன்று பாடசாலை முடிவடைந்து அனைவரும் வீடு திரும்புகின்றார்கள்.

மதனும் மாயவனும் ஒரே தரத்திலையே படித்தனர். மதனுக்கு பேச்சுப் போட்டியில் முதலிடம் கிடைத்தது. மாயவனுக்கு பொறாமையாக இருந்தது. இருவரும் குறுக்கு வீதியைக் கடந்து பிரதான வீதியில் ஏறுகின்றனர்.

" என்ன மதன் அண்டைக்கு நோட்டீஸ் போட்டாங்கள் தமிழ் மண், தமிழ் மொழி பற்றி பேசக் கூடாது என்று ஏன் இப்படிப் பேசின....."

"அடே மாயவன் நான் ஏதும் பொய்யா பேசின இப்ப நடக்கிறத பேசின. அதுக்கு எண்டா பயப்பிடனும்....."

"இல்ல மச்சான் காதல் பற்றி பேசியிருக்கலாந் தானே"

"அதபற்றிதானே எல்லோரும் கதைக்கிறாங்க"

"அப்படியா.......!

"என்ன மாயவன் நீ அதப்பற்றியே கதைக்கிற மெதுவாக கதையடா....."

"டேய் மதன் நா உன்ன............................................"

"எப்படியிருந்தடா என்னோட இப்படி பக்கத்தில இருந்தே ஒன்றா ஒரு கோப்பையில சாப்பிட்டு ஒன்றா படுத்து உறங்கிய எனக்காட இப்படி செய்யப் போற...."

" பேந்து என்னட என்ன செய்ய சொல்லுற எனக்கு கிடைக்க வேண்டிய பரிசை நீ எடுத்துக்கிட்டுப் போயிட்ட நானும் நீயும் ஒன்றாகத் தானே இரவு பேச்சு பாடமாக்கினம். அது என்னடா உனக்கு முதலிடம் எனக்கு இரண்டாமிடம். நானும் இப்படி தெரிந்திருந்தா மண்ணும் மொழியும் என்ற தலைப்பில பேசியிருப்பண்டா....."

"அடேய் நா போட்டியில பரிசு பெறனும் என்று பேசவில்லடா என்ற மனதில இருந்த ஆதங்கத்தத்தாண்டா வெளியில சொன்னனான். உன்ன போல இந்த பரிசுக்காக வேண்டி பேசவில்லையடா.... இந்த உனக்கு பரிசு வேண்டுமென்றால் தாறன் நீ என்ன............................"

"பேசக்க மட்டும் தெரியல இப்பதான் தெரியுது. பேசாம நீ பேச்சுப் போட்டியில பங்கு பற்றாம இருந்திருக்கலாந் தானே. அப்ப எனக்கு அந்த மேடையில பாராட்ட கிடைத்திருக்கும் வா உனக்கு நல்ல வேள செய்கிறன்....."

" வேண்டாம் மாயவன் இது எமது தமிழ் மொழிக்கும் மண்ணுக்கும் நீ செய்யும் துரோகம்......உன்னை வரலாறு திட்டுமடா ஏன்டா காக்கை வன்னியனு பெயரெடுக்கப் போற.....?"

" போடா பைத்தியக்காரா...." எனப் புறுபுறுத்துக் கொண்டு மறைகின்றான்.

"ஐயோ....! அம்மா... ஐயோ... என்று அலறுகின்றான். கண்களின் கட்டு அவிழ்க்கப்படுகின்றது. நடுநிசியில் பெயரே தெரியாத ஊரில் நிற்கின்றதை உணர்ந்து கொண்டான். திடீரென்று தலையில் அடி விழுவிகின்றது. "அம்மா..." என்றவாறு நிலத்தில் மயங்கி விழுகின்றான்.

## காகங்களும் மைனாக்களும்
## புயல்



தமிழ்ச் சிறுகதையின் வரலாறு என்பது பெருக்கெடுத் தோடும் பெருநதி. அந்த நதியில் கலக்கின்ற சிற்றாறுகளில் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் அடங்கும் இந்த சிற்றாற்றில் இணைந்து அதற்கு வளம் கொடுக்கின்ற பற்பல ஓடைகளில் ஒன்றுதான் புயலின் சிறுகதைகள்.

கலாநிதி ம.ரகுநாதன்

ஆசிரியரின் 'காகங்களும் மைனாக்களும்' என்ற இச்சிறுகதைத் தொகுதியில் பத்துச் சிறுகதைகள் இடம்பிடித்துள்ளன. தலைப்புக்கதையான 'காகங்களும் மைனாக்களும்' ஒரு வித்தியாசமான நல்ல கதை. சமகால அவலங்களைக் குறியீடு ஒன்றின் மூலம் ஆசிரியர் சித்தரித்துள்ளார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் குறிப்பிடுவதுபோல, 'தன்னுடைய சமூகத்தின் பல்வகைப்பட்ட துன்பங்களையும், இன்னல்களையும் தன்னுடைய கதைகள் ஊடாக ஆசிரியர் காட்டுகிறார். போரினுடைய கொடுமை ஆக்கிரமிப்பாளர்களுடைய அடாவடித்தனங்கள் இவற்றினால் நைந்துபோன மக்களின் நொந்துபோன மனங்களின் ஏக்கமும் எதிர்பார்ப்புகளும் முன்வைக்கப்படுகின்றன' என்பதை இவரது சிறுகதைகளில் அவதானிக்கலாம். போசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, கலாநிதி ம.இரகுநாதன் ஆசியோரின் மாணாக்கனான புயல் பெ.ஸ்ரீகந்தநேசனிடம் ஈழத்துச்சிறுகதை உலகு இன்னமும் உன்னதமான படைப்பக்களை எதிர்க்கின்றது. 'இலக்கியம் என்பது கலையழகோடும், தேடலோடும் அமையவேண்டும்' என்ற பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கருத்துடன் ஈழத்து இலக்கியத்தின் எதிர்கால நம்பிக்கையான புயலை வாழ்த்துகின்றேன்.

செங்கைஆழியான் க.குணராசா

புயல் ஆசிரியர் யதார்த்தத்தை இக்கதைகள் மூலம் எடுத்துப் பேசுகின்றார். புயல் ஆசிரியர் வளர்வதற்கு காலம் இருக்கின்றது. இளம் கன்றாக இருக்கும் எழுத்தாளன் விருட்சமாக வளர எனது நல்லாசிகள் இவர் மேலும் பல சிறுகதைகளை எழுதி தமிழ் உலகிற்கு செழிப்பு சேர்க்க வாழ்த்துகின்றேன்.

கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பதிப்பகம்

☎ 021 222 7936